2020 - இதழ் 04

இலவசம்

## சித்திரை - 2020

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

www.gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்
2020 - இதழ் 04

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909
(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2020 - இதழ் 04


**4 உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது**

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினி மித்தம் அவர் நொறுக்கப் பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக் கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

**6 யாரோடு போரட்டம்?**

இந்த போராட்டத்திலே, போர் செய்யும்படி உங்களில் இருக்கும் எந்த மனுஷனை நீங்கள் முன்னே அனு ப்பப் போகின்றீர்கள், மாம்ச இச்சையுள்ள புறம்பான பழைய வாழ்க்கைக்குரிய மனுஷனையோ? அல்லது ஆவிக்குரிய புதிய மனுஷனையோ?

**12 பிரசங்கக் குறிப்புகள்**

அவன் எழுந்திருந்த போது, தன்னுடைய பழைய நிலை மையைக் குறித்து பின்வாங்கிப் போகாமல், கர்த்தர் தன்னை சாட்சியாக ஏற்படுத்தினார் என்றும் நான் அவருக்கு சாட்சியாக இருப்பேன் என்று, தனக்குள்ளே தீர்மானம் எடுத்துக் கொண்டான்.

**14 புதிய நாளுக்குள்...**

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


www.gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 14ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... சித்திரை 2, 3, 5, 12, 13, 14, 16, 17, 24, 28, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... சித்திரை 1, 3, 5, 7, 11, 12, 13, 15, 16, 17, 21, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... சித்திரை 7, 10, 16, 19

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... சித்திரை 4, 5, 6, 7, 14, 15, 19, 20, 21, 22, 28, 30

**தேவனுடைய சிட்சையை அற்பாக எண்ணாதிருங்கள்**

... சித்திரை 1, 13, 14, 16, 30

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... சித்திரை 2, 4, 10, 18, 22, 23, 24, 25, 26, 27

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... சித்திரை 6, 9, 10, 11, 21, 24, 26

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... சித்திரை 4, 8, 9, 11, 14, 18, 20, 21, 22, 24, 25, 26, 27, 28, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... சித்திரை 5, 7, 12, 17, 23

**பொறுமையோடு காத்திருங்கள்**

... சித்திரை 1, 5, 14, 15, 16, 17, 30

**தேவ நீதி வெளிப்படும்**

... சித்திரை 8, 11, 15, 16, 17, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... சித்திரை 1, 3, 7, 9, 15, 18, 20, 24, 25, 26, 27, 28, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... சித்திரை 4, 5, 6, 8, 10, 19, 23, 27, 29

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... சித்திரை 8, 13, 15, 20, 29

www.gtachurch.ca

# உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமான தென்ன ப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி இயேசுவை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்க அவரது பெற்றோர் அவரை தேவாலயத்திற்கு கொண்டுவந்தபோது, நீதியும் தேவபக்தியும் உள்ள சிமி யோன்என்னும் பேர்கொண்ட ஒருவர் எருசலேமில் இருந்தார். அவர், இஸ் ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தார். அவர் மேல் பரிசுத்தஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணம டையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவருக்கு அறிவிக்கப்பட் டுமிருந்தது.

அவர் பரிசுத்தஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தார். அவர் இயேசுவைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோ த்திரித்து, ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப் பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர், புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றார்.

## தேவன் புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், சகல ஜனங்களுக்கும் இரட்சகராக இயேசுகிறிஸ்துவை நியமித்துள்ளார்.

இம்மாதத்தில் உலகமெங்கும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுக ளையும் மரணத்தையும் அவரது ஜெயங்கொண்ட உயிர்த்தெழுதலையும் நினைவுகூருகின்றார்கள்.

பாவமில்லாத தேவகுமாரன் பாவிகளான மனிதர்கள் மீட்படையும்படி தம்மை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

இந்நிகழ்வுக்கு முன்பாக இயேசு தம்முடைய சீஷரோடுகூட கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து அங்கே ஜெபம்பண்ணினார். என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்க டவது என்று ஜெபம்பண்ணி தம்மை ஒப்புக்கொடுத்தார்.

பாவியான மனிதர்கள் பாவ மன்னிப்பைப் பெற்று பாவத்திலிருந்து விடு தலைபண்ணப்படுவதே பிதாவாகிய தேவனின் சித்தமாயிருந்தது. இதை த்தான் முன்பாக சிமியோன் என்னும் பேர்கொண்ட தேவ ஊழியக்காரன் அன்று இயேசுவை குழந்தையாகக் கண்டபோது, “உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.” என்று சொல்லி தேவனைத் துதித்தார்.

இயேசுகிறிஸ்துவை குறித்து ஏசாயா என்ற தேவனுடைய தீர்க்கதரிசி இயேசு பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாக அறிவித்திருந்தார். அதில்,

"மெய்யாகவே அவர் (இயேசு) நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினி மித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினைஅவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்", என்று கூறியுள்ளார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

**தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நம க்கு அருளாதிருப்பதெப்படி**?

அவர் நிச்சயமாக தமது நன்மைகளால் நிரப்புவார். கோடி கோடி ஜனங்கள் இயேசுவால் இரட்சிப்பைப் பெற்றார்கள். மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே உண்டு. நீங்களும் அதை பெற்றுகொள்ளும்படி இயேசு உங்களை யும் அழைக்கின்றார்

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

www.gtachurch.ca

# யாரோடு போராட்டம்?

ஒரு ராஜ்யத்திற்கு விரோதமாக யுத்தம் செய்யும்படிக்கு அந்நிய நாட்டு படைகள், அந்த ராஜ்யத்தின் எல்லைகளை சுற்றி வளைத்துக் கொண்டது. இதனிமித்தம், அந்த இரண்டு ராஜ்யங்களுக்கிடையில் வெகுநாளாய் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் ராஜாவும், தளபதியும், படைச் சேவகர்களும் பகலில் வெயிலிலும், இரவில் குளிரிலும் பல தியாகங்களை செய்து தங்கள் உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் தங்கள் தேசத்தையும் அதன் குடிகளையும் காக்கும்படிக்கு போராடிக் கொண்டிருந்தார்கள். வயது மற்றும் உடற்பெலவீனம் காரணமாக யுத்தத்தின் முன்னிலையில் நிற்க முடியாதிருந்த தேசப்பற்றுள்ள குடிகளில் பலர், தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், அதற்கு மேலாகவும் தங்கள் ஆதரவை ராஜாவிற்கும், தளபதிக்கும், படைச் சேவகர்களுக்கும்,அவர்கள் குடும்பத்திற்கும் வழங்கினார்கள். இந்த செய்கையை தேசப்பற்று என்றும் கூறுவார்கள். ஆனால் தேசத்தில் வெகு நாளாய் வசித்து வந்த குடிகளில் பலர், ராஜாவைக் குறித்தும் ராஜ்யத்தைக் குறித்தும், யுத்தத்தில் முன்நிற்பவர்களைக் குறித்தும், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் குடிமக்களை குறித்தும் எதிர்த்து குற்றம் சாட்டுவதிலும் குறை கூறுவதிலும் தங்கள் நேரத்தை விரயமாக்கினார்கள். இப்படியாக தங்கள் ராஜ்யத்திற்கெதிராக எதிர்த்து நிற்கும் குடியானவர்கள், அந்த ராஜ்யத்திற்கு பாரமானார்கள். எப்படியெனில், தங்கள் செய்கைகள் மறைமுகமாக எதிரிகளின் ராஜ்யத்திற்கு ஆதரவாக இருக்கின்றதென்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளாதிருந்தார்கள். இவ்வண்ணமாக தங்கள் செய்கைகளை தொடருகின்றவர்கள், காலப்போக்கில், சந்தர்ப்பம் கிடைக்கும் போது, தங்கள் ராஜ்யத்தின் இரகசியங்களை எதிரிகளுக்கு வெளிப்படுத்தும் அந்நிய ராஜ்யத்தின் ஒற்றர்களாகவே மாறிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களை தேசத்திற்கு துரோகம் செய்கின்றவர்கள் என்று அழைப்பார்கள்.

பரம ராஜ்யத்திற்கு பங்காளிகளாக அழைக்கப்பட்ட எங்கள் ஒவ்வொருவரின் நாளாந்த வாழ்க்கையிலும் போராட்டங்கள் உண்டு. இந்தப் போராட்டம் பிசாசின் ராஜ்யத்திற்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.” (எபேசியர் 6:12). இதை ஆவிக்குரிய போராட்டம் என்று அழைக்கின்றோம்.

இந்த போராட்டத்தின் கருப்பொருள் என்ன? ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே எங்கள் பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தம். நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். (யோவான் 3:16, 1 யோவான் 2:25). அந்த திருச்சித்தம் எங்கள் வாழ்வில் நிறைவேறாதபடிக்கு பிசாசானவனும் அவனுடைய அசுத்த ஆவிகளும் எதிர்த்து போராடுகின்றன. பிசாசானவனுடைய தந்திரம் புதிதானதல்ல (2 கொரி 2:11). தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்யும்படிக்கு ஏவாளை வஞ்சித்தான். அதே பிரகாரமாகவே அவன் இன்றும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருக்கும்படிக்கும், தேவ காரியங்களை சமரசம் செய்யும்படிக்கும் மனிதர்களை வஞ்சிக்கின்றான்.

ஆகையால், தீங்குநாளிலே பிசாசின் தந்திரங்களை நீங்கள் எதிர்க்கவும், தேவன் எங்களுக்கு ஒப்புவித்தவைகளை அவருடைய சித்தப்படி நிறைவேற்றி முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எங்கள் ஆவிக்குரிய போராட்டத்தின், உள்ளான மனிதனின் பாதுகாப்பு கவசமாகவும், தரப்பட்டுள்ள ஆயுதங்களாகவும்: சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சணியம், தேவ வசனம் என்பவைகளை நாங்கள் தரித்துக் கொண்டவர்களாக போர்களத்திலே நிற்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இந்த போராயுதங்கள் எங்களிலே ஆவிக்குரிய கிரியைகளை உண்டு பண்ணும். நாம் ஆவிக்குரிய கிரியைகளை நடப்பிக்காதபடிக்கு, எமக்கெதிரான பிசாசானவனின் அந்தகார ராஜ்யத்திற்குரிய போராயுதங்கள் எவைகள் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போமாகில், அவைகள்: சத்தியதுக்கு விரோதமான பொய், தேவ நீதிக்கு எதிரான அநீதி, சமாதானத்தை குலைக்கும் பிரிவினை, தேவ வார்த்தையிலுள்ள விசுவாசத்திற்கு எதிரான அவிசுவாசம் (பயம்), இரட்சிப்பை விட்டு பின்மாற்றமான வாழ்க்கை, தேவ வசனத்திற்கு கீழ்ப்படியாத வாழ்வு. இவை மாம்சத்தின் (பழைய வாழ்க்கைக்குரிய) மோசம் போக்கும் பொல்லாத கிரியைகள். பொதுவாகவே, மனிதர்களுக்குள் இருக்கும் பாவ சுபாவமே அவரவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை, எதிர்த்து போராட மாம்சத்திற்கு உதவி செய்கின்றதாய் இருக்கின்றது. (ரோமர் 7:15-25)

சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சணியம், தேவ வசனம் இவை யாவும் ஒன்றொடொன்று தொடர்புடையதாக இருக்கின்றது. யோபு என்ற பக்தனுடைய வாழ்விலே, வழமைக்கு மாறான ஆவிக்குரிய போராட்டம் ஏற்பட்டது. ஒன்றன்பின் ஒன்றாக துர்ச்செய்திகள் வந்தது. அவன் தன்: பிள்ளைகள், சொத்துக்கள், செல்வம், சுகம் யாவற்றையும் இழந்து, தனித்து விடப்பட்டான். அவன் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்திலே தளர்ந்து போகாமல் இருந்தபடியால், அவனுடைய மனதிலிருந்த தேவசமாதானத்தை, பிசாசானவனினாலும் அவன் மனைவி மற்றும் நண்பர்களினாலும் குலைத்துப் போட முடியவில்லை. சத்திய வசனம் அவன் வாயிலிருந்தது, எனவே பொய் அவன் வாழ்வை பற்றிக் கொள்ளவில்லை. தேவனுக்கு விரோதமான வார்த்தைகளை பேசாமல், மிகுந்த உபத்திரவ வேளையிலும் தேவ நீதியை நிறைவேற்றினவனாக இருந்தான். அநாதரவாக கைவிடப்பட்ட வேளையிலும், எல்லாவற்றிற்கும்மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தை பிடித்தவனாக, "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்." என்று விசுவாச அறிக்கையிட்டான். நல்ல போராட்டத்தை போராடி விசுவாசத்தை காத்துக் கொண்டான். யோவுவின் நண்பர்கள், தங்கள் அறியாமையினால் யோபுவிற்கு எதிர்த்து நின்றபோதும், அவர்களின் போராட்டத்திலே, அவர்களுக்காக தேவனை வேண்டிக் கொண்டான். ஈற்றிலே பிசாசானவனை முற்றிலும் ஜெயம் கொண்டான் (யோபு 19:25).

சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள்! எங்கள் ஆவிக்குரிய போராட்டத்திலே, நாங்கள் யாரை எதிர்த்து போராடுகின்றோம்? எங்களோடு தேவ ராஜ்யதிற்கு உடன் பங்காளிகளாக அழைக்கப்பட்ட சக விசுவாசிகளையோ? அல்லது எங்கள் மாம்ச கிரியைகளை தூண்டிவிடும் பிசாசானவனையோ? எங்கள் யுத்தம் யாருடன் என்பதை சிந்த்திப் பாருங்கள். எங்களுக்கு இருக்கும் நாளாந்தமான பாடுகளே மற்றவர்களுக்கும் உண்டு. எங்களுக்கு இருக்கும் ஆவிக்குரியபோராட்டமே மற்றவர்களுக்கும் உண்டு.

ஆகவே தற்போது இருக்கின்ற போராட்டத்தோடு, அதற்கு மேலாக ஒருவரொடொருவர் போராட்டத்தை நாங்கள் ஆரம்பிக்கக் கூடாது. இத்தகைய போராட்டம் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றும் போராட்டம். "உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது. உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?" (யாக்கோபு 4:1) அப்படி நாங்கள் மற்றவர்களை எதிர்த்து போராடும் போது, எங்கள் எதிரியாகிய பிசாசானவனுடைய அந்தகாரத்தின் ராஜ்யத்திற்கு ஆதரவாளர்களாக மாறிவிடுவோம். இது மிகவும் பரிதாபமான நிலை!

நான் குற்றம் ஏதும் செய்யாதிருக்க, ஒரு சகோதரனோ, சகோதரியோ எங்களுக்கு எதிராக போர் தொடுத்தால் என்ன செய்வது? இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே எங்கள் ஆவிக்குரிய போராட்டத்தில் நாங்கள் அடைந்திருக்கும் முதிர்ச்சியை, நாங்களும் எங்களை நோக்கி பார்க்கும் மற்றவர்களும் அறிந்து கொள்ள முடியும். முதலாவதாக, நாங்கள் எந்த வார்த்தைப் பிரயோகங்களையும், நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்பாக, இது ஆவிக்குரிய போராட்டம் என்ற உணர்வு எங்கள் உள்ளத்தில் இருக்க வேண்டும். ஆவிக்குரிய போராட்டத்தில் ஜெயங் கொள்ளும்படிக்கு சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சணியம், தேவ வசனம் போன்றவற்றை எங்கள் ஆயுதங்களாக அணிந்தவர்களாக, ஜெபத்திலே விழித்திருக்க வேண்டும். (எபேசியர் 6:18).

இந்த போராட்டத்திலே, போர் செய்யும்படி உங்களில் இருக்கும் எந்த மனுஷனை நீங்கள் முன்னே அனுப்பப் போகின்றீர்கள், மாம்ச இச்சையுள்ள புறம்பான பழைய வாழ்க்கைக்குரிய மனுஷனையோ? அல்லது ஆவிக்குரிய புதிய மனுஷனையோ? பழைய மனுஷனிடம் இருக்கும் ஆயுதங்களில் சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்றய மாம்சத்தின் துர்குணங்களும் நிறைந்திருக்கும். ஆவிக்குரிய உள்ளான மனுஷனிடம்: ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் எங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சுபாவம் இருக்கும்.

இந்த ஆவிக்குரிய போராட்டத்திலே நாங்கள் வெற்றி பெற வேண்டும். **ஆவிக்குரிய போராட்டத்தின் வெற்றி என்பது என்ன?** எங்களுக்கு முன்னோடிகளாக இருந்த பரிசுத்தவான்கள், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடினார்கள். நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திர மாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். (எபிரெயர் 11:1-40). கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே, சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள்! எங்கள் ஆவிக்குரிய போராட்டங்களிலே இத்தகைய நிலை இன்னும் எங்களுக்கு நேரிடவில்லையே! மேலும், கர்த்தராகிய இயேசுவை நினைத்துக் பாருங்கள். அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார், பாவமறியாத பரிசுத்தராகிய அவர், நாங்கள் மீட்படையும்படிக்கு, நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். மதத்தலைவர்களும், அதிகாரிகளும்,



www.atchurch.ca

ஜனங்களும் அவரை எள்ளி நகையாடினார்கள். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படு கிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனு க்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தம் நிறை வேறும்படிக்கு தம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து, நீடிய பொறுமையு ள்ளவராக இருந்தார். ஆதலால் சிலுவையிலே வெற்றி சிறந்தார். (ஏசா யா 53:1-12, லூக்கா 23:35)

யூத மதத்தின் அதிகாரிகளும், போர் வீரர்களும், ஜனங்களில் பலரும், அவருடைய சீஷர்களும் (லூக்கா 24:11,21, மாற்கு 16:14) இயேசுவின் கதை சிலுவையிலே முடிந்து விட்டது என்றிருந்தார்கள். மாம்ச கண்க ளால் (உலக போக்கின்படி) பார்த்தவர்கள், அவர் தோற்றுப் போனார் என் றிருந்தார்கள். ஆனால் அவர் பிதாவாகிய தேவனின் திருச்சித்தத்தை நிறைவேற்றி முடித்ததால், அவர் முற்றிலும் வெற்றி சிறந்தார். அதாவது, **நாங்கள் எங்கள் வாழ்க்கையில் பிதாவாகிய தேவனுடைய சித் தத்தை நிறைவேற்றி முடிப்பதே ஆவிக்குரிய போராட்டத்தின் வெற்றி ஆகும்**. உலகத்தின் சுகபோகங்களை அனுபவிக்காமல், எத்த னையோ உபத்திரவங்களை சகித்து, இரத்த சாட்சிகளாக மரித்து, இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றிருக்கும் அநேக பரிசுத்தவான்களின் கதை முடிந்து விட்டது என்று, உலகத்தார் எண்ணுகின்றார்கள். ஆனால், அவ ர்களோ, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி, ஜெயித்து, பிதா வாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றி, இளைப்பாறுதலிலே பிரவே சித்திருக்கின்றார்கள். கர்த்தரின் மகிமையின் நாளில் நீதியின் கிரீடத்தை பெற்றுக் கொள்வார்கள். (எபி 4:9-10, 2 தீமோ 4:7-8, வெளி 22:12)

எங்கள் நாளாந்த அனுபவங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள்! எடுத்து க்காட்டாக, “அவர் என்னோடு பிரச்சனைக்கு வந்தார் ஆனால் நானோ அவ ருக்கு செம்மையாக மறுமொழி கொடுத்தேன்” என்று பகை, வன்மம், கச ப்புபோன்ற மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுக்கும் போது நாங்கள் எங் கள் சுயநீதியை நிறைவேற்றுகின்றவர்களாக மாறிவிடுவோம். முடிவிலே எதிராளியாகிய பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு போய்விடுவோம்.

எங்கள் வாழ்வின் சில சந்தர்ப்பங்களிலே, நாங்கள் தவறிப்போகலாம், வேறு சில சந்தர்ப்பங்களிலே மற்றவர்கள் தவறிப்போகலாம். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலே, நாங்கள் விரும்பினாலும், சிலர் ஒப்புரவாகுதலு க்கு இடங்கொடுக்காமல் எப்போதும் எங்களை எதிர்த்து போராடுகின் றவர்களாக மாறிவிடலாம். இன்னுமொருவர், சபையின் ஒழுங்கு முறைக ளுக்கு கீழ்ப்படியாமல் கலகம் உண்டு பண்ணுகின்றவராய் இருக்கலாம். அவர்களுடைய தவறான கொள்கைகளுக்கு நாங்கள் உடன்பட்டவர்கள் அல்லர். ஆனால் நாங்கள் தவறிப் போகும் போது தேவன் எங்கள் மேல் நீடியபொறுமையுள்ளவராக இருப்பது போல, எல்லோர் மேலும் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார் என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் (2 பேதுரு 3:9). மேலும், நிர்மூலமாக்குகிறதற்கல்ல, யாவரும் கர்த்தருக்குள் ஊன்றக் கட்டப்பட வேண்டும் என்பதையே கர்த்தர் விரு ம்புகின்றார். (2 கொரி 10:8)“என் சகோதரரே, உலகம் உங்களைப் பகை த்தால் ஆச்சரியப்படாதிருங்கள். நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடி யால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந் திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்தில் நிலை



www.gtachurch.ca

கொண்டிருக்கிறான் என்று சத்திய வேதம் கூறுகின்றது. (1 யோவான் 3:13-14)

ஆதலால், எந்தக் காரணத்தை கொண்டும், பகை, வன்மம், கசப்பு போன்ற பிரிவினைக்குரிய மாம்ச இச்சைகள் எம் இருயத்தில் குடிகொள் வதற்கு இடங் கொடுக்காமல் எங்கள் இருதயத்தை எல்லா காவலோ டும் காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பகை, வன்மம், கசப்பு, பிரிவினை போன்ற மாம்ச பெலத்துக்குரியவையும், உலகத்துக்குரியவை யுமாயிருப்பதால் இவை எமக்குரிய போராட்ட முறைமைகளல்ல. அவை இந்த உலகத்திற்குரியவைகள். இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் இருக்கின்றது. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 5:19, 1 யோவான் 2:17)

தேவ ராஜ்யத்தின் பங்காளிகளாக நாங்கள், மாம்சத்தின்படி போர்செய் கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளா யிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயி ருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூல மாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படு த்துகிறவர்களாயிருக்கிறோம். (2 கொரி 10:3-5)

சத்திய ஆவியாகிய தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்ற பிரகாரமாக, நீங்கள் கர்த்தராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிரு க்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலை த்திருப்பீர்களாக. கர்த்தராகிய இயேசுவின் கற்பனைகளில் நிலைத்திரு க்கின்றவன் அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கின்றான். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. (யோவான் 16:13, 1 யோவான் 2: 27, 1 யோவான் 2:4)

சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள் அது உங்களை விடுதலையா க்கும். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். தான் கண்ட சகோ தரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (யோவான் 8:32, 1 யோவான் 4:20)

சத்தியம் எங்களுக்குள் நிலைத்திருக்கின்றது என்று எதினால் அறிந்து கொள்ளலாம்? “என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இரு தயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.” (1 யோவான் 3:17-19). இன்று பலர், தாங்கள் தேவ நீதியை நிறைவேற்றுகின்றோம் என்ற எண்ணத்துடன் உடன் சகோதரருக்கெதிராக பல போராட்டங் களை ஆரம்பித்துவிடுகின்றார்கள். சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீ ரம் ஒன்றாகவேயிருக்கிறது. நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்த

னியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி 12:12, 27). எனவே மற்றயவர்களுடைய போராட்டங்களிலே, அவர்களுக்கு நாங்கள் பாரமாக அல்ல, அவர்களுக்கு ஆதரவாக நாங்கள் இருக்க வேண்டும்.

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது". எனவே, நீங்கள் உங்களுக்குரிய யுத்தங்களை நடப்பிப்பதற்கு, உங்கள் மாம்சமான மனிதனை அனுப்பாமல், ஆவிக்குரிய மனுஷனை அனுப்ப வேண்டும். அதாவது, நீங்கள் மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடாமல், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளும் போது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். "நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று சத்திய வேதம் கூறுகின்றது" (கலாத்தியர் 5:15).

**எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதே ஆவிக்குரிய வெற்றி சிறக்கும் போராட்டம்.** எனவே தேவனுடைய ராஜ்யத்திற்கு பங்காளிகளாக அழைக்கப்பட்ட நாங்கள், பிசாசானவனின் வஞ்சிக்கும் தந்திரங்களை எதிர்த்து போராட வேண்டும். எங்களுக்கு உண்டாகின்ற பாடுகளைப் போல மற்றய சகவிசுவாசிகளுக்கும் பாடுகள் உண்டு. அதே போல ஊழியர்களுக்கும் உண்டு. நாங்கள் தவறுகின்றது போல மற்றவர்களும் தவறுகின்றார்கள். "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்ய வில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது." (1 யோவான் 8-10)

பிரியமானவர்களே, சத்திய வேதம் கூறுவதைப் போல, "ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக". ( 1 பேதுரு 5:6-10)

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# தேவனுடைய சாட்சிகள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : 1 பேதுரு 2:1-2

சில வேளைகளிலே பெற்றோர் தங்கள் பிள்ளையை நோக்கி, மற்றய மாணவனின் நடைமுறைகளை கவனித்துப் பார்த்தாயா? நீயும் அவனைப் போல செய்யப் பழகிக் கொள்ள வேண்டும் என்று கூறுவது உண்டு. மேலும் மனிதர்கள் தங்கள் வாழ்க்கையிலே, இன்ன இன்னார்கள் நம்பத்தக்க தகைமையுள்ள வழிகாட்டிகளாக (mentor) இருந்தார்கள் என்று கூறுவதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. நாங்கள் அந்த சாட்சிகளை பற்றிக் கொண்டு, நாங்களும் அந்த சாட்சிகளைப் போல வெற்றி வாழ்க்கை வாழத்தக்கதாக நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

சீமோன் பேதுரு என்னும் மனிதன் மீனவ தொழிலைச் செய்யும் சாதாரண மனிதனாக இருந்தான். அந்நாட்களிலே, வேதத்தை முறைப்படி கற்ற பல கல்விமான்கள் இருந்தார்கள். ஆனால் இந்த மனிதனுடைய வாழ்க்கையிலே பெரிதான கல்வியறிவு இல்லாதிருப்பினும் அவன் தேவனுக்குப் பயந்து தேவனை நாடித் தேடுகின்ற மனிதனாகவே இருந்தான். இந்த மனிதனை இயேசு தன்னைப் பின்பற்றி வரும்படி அழைத்தார். இவனையே தன்னுடைய பிரதான சீஷனாகவும் ஏற்படுத்தினார். கர்த்தராகிய இயேசு சென்ற இடங்களெல்லாம் இவனையும் தம்மோடு அழைத்துச் சென்றார். இவனுடைய வாழ்க்கையிலே பெலவீனமான நேரங்கள் அநேகம் இருந்தது. சில வேளைகளிலே சூழ்நிலைகளினாலே இவனுடைய விசுவாசம் தளர்ந்து போயிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், பிதாவுடைய சித்தத்திற்கு விரோதமாக இயேசுவுக்கு ஆலோசனை கூறியதால், இயேசு அவனைக் கடிந்து கொண்டார்.

கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இராத்திரியிலே, பேதுருவை நோக்கி: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உன்னைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அவர் அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அவ்வண்ணமாகவே அன்று இராத்திரியிலே கர்த்தரை தனக்கு தெரியாது என்று மூன்று முறை



www.gtachurch.ca

மறுதலித்தான் என்றார். கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினை வுகூர்ந்து, தன்னை அழைத்த கர்த்தரை மறுதலித்தேன் என்று மனங் கசந்து அழுதான்.

கர்த்தராகிய இயேசு மரித்து உயிர்தெழுந்த பின்பு, தன்னுடைய சீஷர்களை நோக்கி: அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தி னாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சி களாயிருக்கிறீர்கள். மேலும் கர்த்தர்தாமே தன்னுடைய மந்தையை (தம்முடைய ஜனங்களை) மேய்க்கும்படிக்கான பொறுப்பை பேதுருவிடம் கொடுத்தார். பேதுருவின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும் போது, இந்த பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு பேதுரு தகுதியான மனிதனா? பேதுரு கர்த்தரை குறித்து சாட்சி கொடுப்பதற்கு தகுதியான மனிதனா? கர்த்தருக்கு சாட்சியாக இருக்க வேண்டிய இடத்திலே அவன் கர்த்தரை மூன்றுமுறை மறுதலித்தான். ஆனாலும், தன் குற்றத்தை உணர்ந்து மனம் வருந்தி, கர்த்தரால் தேற்றப்பட்டு, மன்னிப்பைப் பெற்று, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, கர்த்தராலே, கர்த்தருக்கென்று சாட்சியாக நிற்கும் மனிதனாக தகுதிப்படுத்தப்பட்டான்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற முன்னதாகவே கர்த்தருடைய உயிர்தெழுதலுக்கு சாட்சியாக இருப்பதற்கு தீர்மானம் எடுத்துக் கொண் டான். அதுமட்டுமல்ல, கர்த்தரை காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்காரி யோத்தின் இடத்திற்குப் பதிலாக, கர்த்தர் உயிரோடெழுந்ததைக்குறி த்து, எங்களுடனேகூடச் சாட்சியாக இன்னுமொருவனை ஏற்படுத்தப்ப டவேண்டும் என்று கூறினான். (அப் 1:21-22).

கர்த்தருடைய மரணத்திற்கு முன்னதாகவும், கர்த்தருக்கு சாட்சியாக எப்போதும் இருப்பேன் என்று தீர்மானத்தை எடுத்திருந்த போதும் அவன் விழுந்து போனான். ஆனால் அவன் எழுந்திருந்த போது, தன்னுடைய பழைய நிலையைக் குறித்து பின்வாங்கிப் போகாமல், கர்த்தர் என்னை சாட்சியாக ஏற்படுத்தினார் நான் அவருக்கு சாட்சியாக இருப்பேன் என்று தீர்மானம் எடுத்துக் கொண்டான். முன்பு யூத மதத் தலைவர்களுக்கு பயந்திருந்த மனிதன், தன்னுடைய வீழ்கையின் நிமித்தம் தளர்ந்து போகாமல், பெந்தகோஸ்தே என்னும் நாளிலே, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, எந்தவித பயமும் இன்றி பல்லாயிரக்கணக்கான ஜன ங்கள் மத்தியிலே எழுந்து நின்று : “இயேசுவை தேவன் எழுப்பினார் இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.” என்று தைரியமா கக் கூறினான்.

பிரியமானவர்களே, பேதுருவைப் போல நாங்களும் எங்கள் விழுகையி னால் தளர்ந்து போகாமல் திடமனதோடு இயேசுவுக்கு சாட்சியாக வாழ வேண்டும். கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டா னால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்க ளையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசன மாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருப்பீர்களாக.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத்
தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# தேவனுக்கேற்ற இருதயம்

தன் தந்தையாரோடு கொல்லனுடைய பட்டறைக்கு சென்ற சின்ன மகனானவன், அங்கு எப்படியாக இரும்புக் கம்பிகளை நெருப்புச் சூளையிலே போட்டு, காய்ச்சி, அடித்து, வளைத்து வடிவமைக்கின்றார்கள் என்ற படிமுறையை சற்று தொலைவில் நின்று ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண்டிருந்தான். அவர்கள் வீடு திரும்பும் போது, அப்பா, ஏன் அந்த மனிதன் இரும்புக் கம்பிகளை எரிகின்ற நெருப்புச் சூளைக்குள் போடுகின்றார் என்று மகன் தன் தந்தையி டம் கேட்டான். மகனே, இரும்பு மிகவும் கடினமானது, அதை உபயோகித்து ஏதாவது வடிவமைப்பை செய்வதற்கு, அது இயல்பாக வளைந்து கொடுக்க மாட்டாது. ஆனால் அதை நெருப்பில் போடும் போது, அது தன் கடினத்தை இழந்து போவதால், கொல்லன் அதை தனக்கு வேண்டிய பிரகாரமாக வளைத்து வடிவமைத்துக் கொள்வான் என்று தந்தை பதிலளித்தார். இந்த சம்பவத்தை எங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டு சற்று சிந்தித்துப் பார்ப்போம். பல முறை அறிவுரை கூறப்பட்டும் தன் வழிகளை ஆராய்ந்து பார்த்து மனந்திரும்ப மனதில்லாமல், இது என்னுடைய கொள்கை, இது என்னுடைய தத்துவம், இது என்னுடைய வாழ்க்கை என்று எங்கள் இருதயத்தை நாங்களே இரும்பைப் போல கடினப்படுத்தக் கூடாது. அப்படியாக சுய கௌரவத்தினால் கடினப்பட்ட இருதயம் தேவனுக்கு உகந்த வாசனையைக் கொடுக்கும் இருதயம் அல்ல. இந்த இருதயம் இரும்பைப் போல கடினப்பட்டிருப்பதால், அந்த இருதயத்தை பயனுள்ள கருவியாய் மாற்றியமைப்பதற்கு அது புடமிடப்பட வேண்டும். அந்த அனுபவம் மிகவும் கடினமாயிருக்கும். ஒரு வேளை எங்கள் இருதயம் தேவனுக்கு பிரியமில்லாத ஏதாவது காரியம் ஒன்றில் வைராக்கியமாயிருந்தால் அதை இன்றே விட்டுவிடுவது நல்லது. அல்லது அநேக காலமாக மனம் கடினப்பட்டு, இப்போது வாழ்க்கை புடமிடப்பட்டுக் கொண்டிருந்தால், அந்த படிமுறையின் பலன் நன்மையாக இருக்கும்படிக்காய், உள்ளான மனிதன் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்த சுபாவங்களை அடையும்படி விட்டுக் கொடுங்கள். நாங்கள் எப்போதும் தம்முடையவர்களாக இருக்கும்படியே கர்த்தர் விரும்புகின்றார்.

**மல்கியா 3:3**

**அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப்பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்.**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, உமக்கெதிராக முரட்டாட்டமும் வைராக்கியமும் என்னில் குடிகொள்ளாதபடிக்கு, உமக்கு உகந்த வாசனையான வாழ்க்கை வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய கரத்தின் கிரியை

பல ஆண்டுகளாக பிரபல்யமான ஒரு வைத்திய நிபுணராக சேவை செய்து, ஓய்வு பெற்ற மனிதன், தன் பாடசாலையின் ஆரம்ப நாட்களை பின் னிட்டு பார்த்தான். ஆரம்ப நாட்களிலே, பாலர் பாடசாலையின் ஆசிரியை, எவ்வளவு அர்ப்பணிப்போடு சேவையாற்றினார் என்பதை உவகை நிறைந்த உள்ளத்தோடு எண் ணிப் பார்த்தான். தான் நாட்டிலே பிர பல்யமான வைத்தியர் என்ற பெயரை யும், பட்டத்தையும், கனத்தையும் நன் மதிப்பையும் பெற்றுக் கொண்டது உண் மை. ஆனால், தான் அந்த நிலையை அடைவதற்கு எத்தனையோ மனிதர் கள் உகந்த பாத்திரங்களாக பயன்ப டுத்தப்பட்டார்கள்என்பதை நன்கு உண ர்ந்து கொண்டான். அந்த பாலர் வகு ப்பு ஆசிரியை இன்று பூவுலகில் இல் லாதிருந்தாலும், அந்த அருமையான ஆசிரியை தான் அழைக்கப்பட்ட அழை ப்பை அர்ப்பணிப்போடு செய்ததால், அவருடைய பிரயாசத்தின் பலன் இவ்வுலகில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கொத்ததாகவே, குறிப்பிட்ட சில தாய்மார்கள் உலகத்தை கலக்கிய பெரும் தேவ ஊழி யர்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டார்கள். இவ்வண்ணமா கவே நாங்கள் ஒவ்வொருவரும் தேவனாகிய கர்த்தருடைய கரத்தின் கிரியைகளாக இருக்கின்றோம். எங்கள் அழைப்பு, இந்த உலகத்தின் பார்வையின்படி சிறிதான காரியமாகவோ அல்லது பெரியதான காரி யமாகவோ அல்லது ஒரு பொருட்டாகவோ எண்ணப்படாதிருக்கலாம். ஆனால் தேவன் எந்த நோக்கத்திற்காக எங்களை அழைத்தாரோ, அந்த நோக்கம் எங் களில் நிறைவேறும்படிக்காய் நாங்கள் எங்களை அர்ப்பணிக்க வேண்டும். இந்த உலகமும் அதன் வாழ்க்கையும் ஒழி ந்து போகும், ஆனால் பிதாவாகிய தேவனின் சித்தத்தை தங்கள் வாழ் க்கையில் நிறைவேற்றும் மனிதர்கள் என்றென்றும் அழியாத நித்திய வாழ்க்கையை சுதந்தரித்துக் கொள்வார்கள். எனவே, மற்றவர்களோடு எங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டு, எங்கள் வாழ்வின் நோக்கத்தை விட் டு அகன்று போகாதபடிக்கு, நாம் கர்த்தருடைய கரத்தின் அதிசய மான கிரியைகள் என்பதை உணர்ந்தவர்களாக எங்களை கர்த்தருடைய சமுகத்திலே தாழ்த்துவோம். அவர் அழைப்பின் நோக்கத்தை நிறை வேற்றுவோம்.

**ஏசாயா 64:8**

இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண் நீர் எங்களை உருவாக்குகிற வர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.

**ஜெபம்**: அன்பின் பரலோக பிதாவே, நீர் என்னை நம்பித் தந்த பொறு ப்பை நான் உம்முடைய சித்தப்படி நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக பெலனை தந்து, என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீ குணப்பட்ட பின்பு...

ஒரு தேசத்திலுள்ள பிரசித்திபெற்ற மனிதன் ஒருவன், ஒரு குறிப்பிட்ட வர்த்தகச் சின்னத்தில் (Brand Name) உற்பத்தியாக்கப்படும் கை மருந்துப் பொருளொன்றை விளம்பரப்படுத்துவதற்கு குறிப்பிட்ட உற்ப த்தியாளருடன் உடன்படிக்கை செய்து கொண்டான். அந்த கை மருந்தை அவன் உண்மையாக வீட்டிலே உபயோகிக்கலாம் அல்லது உபயோகிக்காமல் இருக்கலாம் ஆனால் குறிப்பிடப்பட்ட அந்த வர்த்தக சின் ன த்தின் கீழ் உற்பத்தியாக்கப்படும் அந்த கை மருந்தை அவன் தன் உடல் ஆரோக்கியத்திற்காக உபயோகிப்ப தைப் போலவும், அதை வாடிக்கை யாளர்களுக்கு பரிந்துரை (recommend) அளிப்பதுபோலவும் விளம்பரத்திலே காட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஒரு வேளை, அந்த குறிப்பிட்ட கை மரு ந்து உண்மையிலேயே தேக ஆரோ க்கியத்திற்கு அதி சிறந்ததாக இரு க்கலாம். ஆனால் அதை அவன் தான் உட்கொள்ளாமல், அதை வாடி க்கையாளர்களுக்கு பரிந்துரை அளிப்பதினால் அந்த கை மருந் தினால் அவனுக்கு ஏற்படும் நன்மை என்ன? சிந்தித்துப் பாருங்கள்! ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே பிதாவாகிய தேவனுடைய அநாதித் தீர்மானம். எனவே எங்களுடைய அழைப்பு, அந்த விளம்பர உடன்படிக்கையைப் போன்ற அழைப்பு அல்ல. இயேசுவின் பிரதான சீஷனாகிய பேதுரு என்பவர், பெரும் சோதனையில் அகப்பட்டுக் கொள்ளப் போகின்றார் என்று இயேசு அறிந்திருந்தார். இயேசு அவரை நோக்கி: நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: **நீ குணப்பட்டபின்பு** உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். அதாவது, முதலாவது "**நான் குணமடைய வேண்டும்**" நான் தேவனு டைய பிரமாணங்களின் வழியில் நடக்க என்னை ஒப்புவிக்க வேண் டும். எங்கள் ஆத்துமா கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையு ம்படி கர்த்தராகிய இயேசு பாடுகளை ஏற்றுக் கொண்டு, தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார். எனவே நாங்கள் எங்கள் வழி களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எங்கள் திருவுணவாகிய வேத வார்த்தைகளை வாசித்து, தியானித்து, அவைகளின் வழியிலே நடப்ப தில் நாங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும்.

**லூக்கா 22:32**

நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்: நீ குணப் பட்டபின்பு உன் சகோ தரரை ஸ்திரப்படுத்து என்றார்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, எனக்கு அல்ல மற்றவனுக்கே மனமாற்றம் தேவை என்ற எண்ணம் எனக்குள் ஒருபோதும் வராதபடிக்கு, நான் நாளுக்கு நாள் உம்முடைய சாயலில் விருத்தியாக என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | சித்திரை 4** | 📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:7–10

# பிள்ளைகளின் எதிர்காலம்

“என்னுடைய வாழ்வு முடிந்து விட்டது, நான் வாழ்வதெல்லாம் என்னுடைய பிள்ளைகளுக்காக” என்று பெற்றோர் சொல்வதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட கூற்றுக்கள், சில பெற்றோரின் உள்ளத்தில் பிள்ளைகளைக் குறித்து இருக்கும் கரிசனையை வெளிப்படுத்துகின்றது. வேறு சிலரின் வாழ்க்கையிலே இத்தகைய வார்த்தைகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பின்னடைவுகளினாலும் மனதில் ஏற்பட்ட வடுக்களினாலும் உண்டாகின்றது. இதற்கொத்தபடி, என்னுடைய பிள்ளைகள் ஆலயத்திற்கு சென்று நல்வாழ்க்கை வாழ்வதே என்னுடைய ஏக்கம் என்று சிலர் சொல்லிக் கொள்வார்கள். அது நன்மையான ஏக்கம்! அதை எப்படி இந்த உலகிலே, எங்கள் வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்துவது? கடந்த காலத்திலே அறிந்தோ அறியாமலோ செய்த தவறுகளினாலோ அல்லது இயேசுவை அறியாத நாட்களிலே வாழ்க்கையிலே ஏற்பட்ட துன்பங்களினாலோ கடந்த காலத்திலே பல ஏமாற்றங்களை நாம் சந்திக்க நேர்ந்திருக்கலாம். நான் உனக்கு இன்று சமாதானம் தருவேன் என்று இயேசு கூறுகின்றார். எங்களுடைய பிள்ளைகளின் வாழ்வின் எதிர்காலம் செழிப்படையும்படிக்கு, நாங்கள் தேவனுக்கு பயந்து அவர் வழிகளில் நடக்க வேண்டும். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றும்படிக்காய் நாங்கள் வாழ்கின்றோம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக நாம் வாழும்படி பெற்றோர்களாகிய நாங்கள், முதலாவது எம் வாழ்வை முழுமையாக இயேசுவினிடத்திலே ஒப்படைக்க வேண்டும். வனாந்தரத்திலே வழியையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகின்ற தேவன் என்றென்றும் ஜீவிக்கின்றார். (ஏசாயா 43:19). நம்பிக்கை இழந்து போன வாழ்வை வளமாக மாற்றுகின்ற தேவன் பாசத்தோடு அழைக்கின்றார். கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கின்றவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப்போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷனும் அவனுடைய சந்ததியும் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

**சங்கீதம் 128:4**

**இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.**

**ஜெபம்:** ஆசீர்வதிக்கும் தேவனே, கடந்த கால சாவல்களினால் இருதயம் சோர்ந்து போகாதபடிக்கு, உம்முடைய திருச் சித்தம் என்னுடைய வாழ்வில் நிறைவேறும்படிக்காய் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதிர்காலத்தைக் குறித்த பயங்கள்

**மத்தேயு 6:34**

ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

பாடசாலையின் விடுமுறையின் நாட்கள் இன்னும் ஒரு வாரத்தில் முடிந்து விடும். சின்ன மகன் இரண்டாம் வகுப்பிற்கு செல்லப் போகின்றான். பாடசாலைக்குரிய புதிய சீருடையையோ, காலணியையோ வாங்குவற்கு நிர்வாகம் போதாது. மற்றய மாணவர்கள் மத்தியில் என்னுடைய மகன் வெட்கப்படப் போகின்றான் என்பது ஒரு தாயாருடைய ஏக்கமாக இருந்தது. இப்படியாக மனிதர்கள் இனி நடக்கவிருக்கும் காரியங்களை அதிகமாக சிந்தித்து கலக்கமடைவது சகஜம். "நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" என்று மீட்பராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஏனெனில் எங்களுடைய தேவை என்னவென்று பரம பிதா அறிந்திருக்கின்றார். இயேசு தாமே இதை கூறியதுடன் மட்டும் நின்றுவிடாமல், தாம் கூறிய தேவ வாக்கின் படி வாழ்ந்து காட்டினார். இயேசுவின் பூலோக திருப்பணி நிறைவேறும் நாள் நெருங்கிய போது, இன்னும் சில நாட்களிலே, எருசலேமிலே, நிந்தையையும், அவமானத்தையும், பாடுகளையும் தான் சந்திக்க வேண்டும் என்று அறிந்திருந்தும், எந்த தயக்கமும் இன்றி எருசலேமிற்கு வருகை தந்தார். அந்த நாளை குருத்தோலை ஞாயிறு என்று நினைவு கூருகின்றோம். ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்து மாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். என்று கூறிய இயேசு பரம பிதாவின் சித்தமில்லாமல் தனக்கு ஒன்றும் நேரிடாது என்று உறுதியான நம்பிகையுடையவராக தம்மை முற்றிலுமாய் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். அதை நிறைவேற்றி முடிக்க வேண்டிய பெலனை பிதாவானர் இயேசுவுக்கு அருளினார் (லூக்கா 22:43). எனவே கர்த்தராகிய இயேசு எங்களு க்காய் பட்ட பாடுகளை அதிகமாக தியானிக்கின்ற இந்த நாட்க ளிலே, பாடுகளின் தியானத்தின் கருப்பொருளைப் பற்றிக் கொள்ள வேண்டும். எங்கள் எதிர்காலத்தை சந்திக்க, பிதாவின் சித்தத்தை நிறை வேற்றி முடிக்க வேண்டிய பெலனை தேவன் எங்களுக்கு தருவார் என்ற நம்பிக்கையில் நாங்கள் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, எதிர்காலத்தை குறித்து கலக்கமடையாமல், உம்முடைய திருச்சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றி முடிக்க என்னை பெலப்படுத்தி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிபந்தனையற்ற அர்ப்பணிப்பு!

இயேசுவின் தாயாகிய மரியாளின் அர்ப்பணிப்பைக் குறித்து இன்று நாங்கள் பெருமிதமாக பேசிக் கொள்கின்றோம். ஏனெனில் அந்த தாயாருடைய வாழ்க்கையை ஒரு கதையைப் போல ஒரு சில மணித்தியாலங்களில் வாசித்து முடித்து விடுகின்றோம். அதாவது, தேவ தூதன் மரியாளிடம் வந்து, நீ ஸ்திரிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்ற மங்களகரமான வார்த்தையை கூறி, உன்னிடத்தில் மெசியா பிறப்பார் என்று கூறினான். அதன்படி நாட்கள் நிறைவேறிய போது இயேசு பிறந்தார். முப்பது வயதாகிய போது இயேசு ஞான ஸ்நானம் எடுத்தார். தம்முடைய பூலோக திருப்பணியை முடித்து, சிலுவையிலே மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பின்பு அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்திலே வீற்றிருக்கின்றார். இந்த, தேவனுடைய அநாதி திட்டம் நிறைவேறும்படிக்கு உன்னதமான பாத்திரமாக மரியாள் பயன்படுத்தப்பட்டாள் என்று இன்று நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆனால், அன்று அந்த கன்னிகையான மரியாள் இவை யாவும் எப்படியாக நிறைவேறும் என்பதை அறிந்திருக்கவில்லை. அப்படியிருந்தும், தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை விசுவாசித்து, அவருடைய சித்தம் தன்னில் நிறைவேறும்படிக்கு தன்னை ஒப்புக் கொடுத்தாள். இன்று, தம்முடைய வார்த்தை வழியாக தேவன் எங்களோடு பேசுகின்றார். அந்த வார்த்தையை கேட் டு, அதன்படி ஒரு நாள் கூட பொறுமையாக இருப்பதற்கு எம்மில் சிலர் கஷ்டப்படுகின்றார்கள். பிரியமானவர்களே, எங்களுடைய நிலையை சற்று ஆராய்ந்து பார்ப்போம். விசுவாசமில்லாமல் நாங்கள் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ முடியாது. அதாவது, தேவனுடைய வார்த்தையை நம்பி ஏற்றுக் கொள்வதுடன் நின்றுவிடுவது விசு-வாசம் அல்ல. கிரியையில்லாத விசுவாசம் செத்தது. இயேசுவின் தாயாகிய மரியாளைப் போல, தேவ வார்த்தையை நாங்கள் ஏற்றுக் கொண்டு, முற்றிலுமாய் எங்களை அர்ப்பணித்து, வருடங்கள் காலங்கள் கழிந்தாலும், அவமானங்கள் நிந்தைகளை சந்திக்க நேரிட்டாலும், பாதை கஷ்டமாக இருந்தாலும், தேவன் சொன்ன வார்த்தையை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன், தேவ சித்தம் எங்களில் நிறைவேறும்படி பொறுமையுடன் நாம் காத்திருக்க வேண்டும்.

**லூக்கா 1:38**

அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகிலே வாழும் நாட்களிலே உம்முடைய வார்த்தையை விசுவாசித்து, அதன்படி என் வாழ்வை பூரண அர்ப்பணிப்போடு வாழ எனக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் உள்ளத்தின் நினைவுகள்

உத்தமனும் நீதிமானாகவும் வாழ்ந்து வந்த ஒரு கிராமத்தின் அதிகாரி (Mayor) தான் செய்யும் வேலையில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான். அந்த கிராமத்திலும், அதை அண்டிய பல பட்டண ங்களிலும் அந்த அதிகாரி ஜனங்கள் மத்தியில் மிகவும் நல்மதிப்பு பெற்றவனாகவும், அவனுடைய வார்த்தைகள் ஜனங்கள் மத்தியிலே கனம் பெற்றதாகவும் இருந்து வந்தது. ஒரு நாள், அந்த அதிகாரியை சந்திக்கும்படிக்கு, நாட்டின் தலைநகரிலிருந்து ஒரு செல்வந்தர் வருகை தந்திருந்தார். அந்த கிராமத்தின் அபிவிருத்திக்காக பெருந்தொகை பணத்தை கொடுப்பத ற்கு உறுதிமொழி (Pledge) பூண்டார். சில மணி நேரங்கள் கலந்துரையாடிய பின்பு, கிராமத்திலிருந்த பூங்காவின் எதிர்பக்கத்திலுள்ள வயல் நிலத்தில், தன் தொழிற்சாலையை நிறுவும்படி க்கு, எப்படியாவது அரச அதிகாரி களிடமிருந்து அனுமதி (Permit) பெற் றுத் தரும்படி கேட்டார். கிராமத்தின் அதிகாரி அந்த செல்வந்தரை நோக்கி: மன்னிக்கவும், நீங்கள் எதிர்பார்த்து வந்திருக்கும் இந்தக் காரியம் கைகூடி வரப்போவதில்லை. கிராமத்தின் நலனு க்கு எதிராக எந்த காரியத்தையும் நான் செய்யப் போவதில்லை என்று திட்டமாக கூறினார். பிரியமானவர்களே, தவறான நோக்கங்கள் எவ்வளவு உயர்ந்த வெகுமதிகளோடு வந்தாலும், அவை நீதிமான்களி டம் செல்லுபடியாகப் போவதில்லை. அதே போல நாங்கள் யாராக இருந்தாலும், தவறான நோக்கங்களுக்காகவும், இழிவான ஆதாயங்க ளுக்காகவும் தேவனை தேடுகின்றவர்களாக இருக்கக்கூடாது. இம் மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்க ளாயிருப்போம். இந்த உலகத்திலே எங்களைக் குறித்ததும், எங்கள் குடும்பத்தைக் குறித்ததுமான சுய குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்ற நோக்கமுடையவர்களாக வாழக் கூடாது. இருதயங்களை ஆரா ய்ந்தறிகின்ற தேவன் எங்கள் உள்ளத்தின் நினைவுகளை அறிந் திரு க்கின்றார். பரலோகத்திற்குரிய மேலான, அழியாத, நித்தியமான ராஜ் யத்தை சுதந்தரித்துக் கொள்வதையே நோக்கமாக கொண்டு வாழ வேண்டும்.

**கொலோசெயர் 3:1**

**நீங்கள் கிறிஸ்துவுடன் கூடஎழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றி ருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, என் தவறான எண்ணங்கள் நிறைவே றும்படிக்காய் கிரியைகளை நடப்பிக்காமல், பரலோகத்திலுள்ள மேலான வைகளை தேட உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனை அறிந்தவன் யார்?

ஒரு மனிதனானவன், அவன் வசிக்கும் ஊரிலுள்ள நீதிமன்றத்தில் நீதிபதியாக கடமையாற்றி வருபவர் தனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும், அவர் தன்னுடன் அநேக வருடங்களாக கல்வி கற்றவரென்றும், தன் மனைவிக்கும் கிட்டின சொந்தமானவர் என்றும் அடிக்கடி சொல்லிக் கொள்வான். அந்த மனிதனானவன் கூறிய யாவையும் உண்மையே. அதனால் அந்த ஊரிலுள்ள அயலவர்கள், நீதிபதிக்கு நன்கு அறிமுகமான அந்த மனிதரோடு ஒரு சச்சரவுக்கும் போகாதபடி தவிர்த்துக் கொண்டார்கள். இப்படியாக பல ஆண்டுகள் சென்ற பின்பு, குறிப்பிட்ட அந்த மனிதன், ஊரிலே நடைபெற்ற கலவரமொன்றிற்கு காரணமாகிவிட்டான். அவனு க்கு எதிராக அயலவன் ஒருவன் வழக்கு தாக்குதல் செய்தான். அந்த அயலவனோ நீதிபதிக்கு அறிமுகமானவன் அல்ல. வழக்கின் நாளன்று, நீதிபதிக்கு அறிமுகமானதால் ஏதும் சலுகை கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த அந்த மனிதன், ஏமாற்றமடைந்தான். ஏனெனில் நீதிபதியோ நீதியாய் நியாத்தீர்ப்பை வழங்கினார். அவன் நீதிபதிக்கு அறிமுகமானவனாக இருந்தாலும், அவன் செய்த குற்றத்திற்குரிய தண்டனை அவனுக்கு வழங்கப்பட்டது. அந்த மனிதன் நீதிபதியை யார் என்று அறிந்திருந்தும் அவன் வாழ்வில் நீதியை கடைப்பிடிப்பதில் பெரிதான கவனம் செலுத்தவில்லை. அதுபோலவே, “இயேசுவை எங்களுக்கு தெரியும். அவர் எனக்கு சொந்தமானவர். நாங்கள் தொன்றுதொட்டு கிறிஸ்தவர்கள்” என்று நாங்கள் கூறிகொள்வதுடன் நின்றுவிட முடியாது. கர்த்தராகிய இயேசுவை அறிந்தவன் அவரின் கட்டளைகளின் வழியிலே அதிக கவனமுள்ளவனாக வாழ்வான். கர்த்தரை அறிந்தும் அவர் கட்டளைகளின் வழியில் வாழாதவன் அவரை தன் வாழ்வில் மறுதலிக்கின்றவனாக இருக்கின்றான். கர்த்தருடைய ஆலோசனையை தள்ளுகின்றவன் பொல்லாப்புகளில் தன் வாழ்வை சிக்க வைத்து கொள்வான். முடிவிலே அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாவான். உலகமானது இரட்சிக்கப்படுவதற்காகவே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். எனவே நித்திய ஆக்கினையை எங்களுக்கு நாங்களே வருவித் துக் கொள்ளாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படிக்காய் நாம் தேவ வார்த்தையில் நிலைத்திருப்போம்.

**1 யோவான் 2:3**

**அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, நான் உம்மை அறிந்திருக்கின்றேன் என்று சொல்லி, நீதியின் வழியை புறக்கணிக்கின்றவனா(ளா)ய் வாழாதபடிக்கு, உம்முடைய சித்தத்ததை என் வாழ்வில் நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

பரிசுத்த வாரம்

# இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவோம்

"இந்த அயலிலுள்ள மனிதர்களைவிட நான் பரவாயில்லை" என்று ஒரு மனிதன் தன் உள்ளத்தில் கூறிக் கொண்டான். இப்படியான எண்ணங்கள் ஒரு மனிதனில் தலை தூக்கும் போது, அவனை அறியாமல் அவன் உள்ளத்தில் பெருமை ஆட்கொள்ள ஆரம்பிக்கின்றது. எங்களில் பெரியவன் யார்? அல்லது உயர்ந்தவன் யார்? என்ற கேள்வி அன்று இயேசுவின் சீஷர்கள் மத்தியிலே இருந்தது. "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." என்று இயேசு கூறியிருக்கின்றார். மேலும், இராப்போஜன பந்தியை அனுசரித்த அந்த இரவிலே, தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவி, அவர்களுக்கு தாழ்மையின் மேன்மையை வெளிப்படுத்தினார். ஆகவே, இவை ஊழியர்களுக்குரிய படிப்பினைகள் என்று சிலர் எண்ணிக் கொள்வதுண்டு. ஆனால் உயர்ந்தவன் யார்? பெரியவன் யார் என்னும் எண்ணம் ஏதோ ஒரு வகையில் மனிதர்களின் உள்ளத்திலே ஒட்டிக் கொள்வதுண்டு. இந்த நிலை அவரவர் குடும்பத்தைக் குறித்ததாகவோ, பிள்ளைகளை குறித்ததாகவோ, மற்றும் கல்வி, அந்தஸ்து, வேலை போன்றவையை குறித்ததாகவோ இருக்கலாம். ஆலயத்திற்கு சென்றால் நான் தாழ்ந்த மனதுடையவன் மற்றும்படி என்பாட்டிற்கு உலக அளவுகோலின்படி வாழ்க்கையை நடத்திக் கொள்வேன். கர்த்தராகிய இயேசுவின் பூவுலக பணியை சற்றுசிந்தித்துப் பாருங்கள். தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். (யோவான் *13:5-6*). அதை இயேசு கடமைக்காக செய்யவில்லை. அவர் விண்ணுலகின் வேந்தனாக இருந்தும், மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். அதன் கருப்பொருளாவது நாங்கள் யாவரும் தாழ்மையுள்ள சிந்தையுடையவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் இந்த உபதேசங்களை நன்கு அறிந்திருக்கிறோம். அறிந்தவைகளை எங்கள் அனுதின வாழ்க்கையில் கைகொள்வோமானால் பாக்கியவான்களாயிருப்போம். எங்கள் மீட்பராகிய இயேசுவைப்போல நாமும் தாழ்ந்த எண்ணம் உள்ளவர்களாக வாழக்கடவோம்.

**யோவான் 13:15**

**நான் உங்களுக்குச் செய்ததுபோலநீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, எந்த நிலையிலும் என்னுடைய நிலையைக் குறித்த பெருமை என் வாழ்வில் தலை தூக்காமல், வாழ்வின் கருப்பொருளை உணர்ந்தவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இன்றே இரட்சண்ய நாள்

பாவிகள், திக்கற்றவர்கள், திடனற்றவர்கள், ஏழைகள், எளியர்கள், பெலவீனமுள்ளவர்கள், சமுதாயத்தினாலே புறக்கணிக்கப்பட்டவர்கள், அநாதைகள், வாழ்விழந்தவர்கள், அடிமைத்தன கட்டுக்களில் சிக்கியிருப்போர்கள் மற்றும் தனிமையிலே வாடுவோர்கள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற எந்த பாகுபாடுகள் எதுவும் இல்லாமல், யாவரும் நித்திய ஆக்கினையிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, முடிவில்லாத பேரின்ப வாழ்வை பரலோகத்திலே வாழ வழி வகுக்கும்படிக்கு தேவ குமாரனாகிய இயேசு தன்னைத் தாழ்த்தி இந்த உலகத்திற்கு வந்தார். மனிதகுலத்தின் பாவத்தை தன்மேல் ஏற்றுக் கொண்டு தம் உயிரை தியாகம் செய்தார். அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷராால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார் அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஆம் பிரியமானவர்களே, இந்த உலகத்தையும், அதிலுள்ள மனிதர்களின் போக்குகளையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்! நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். ஆனால் நாம் பாவிகளாகயிருக்கையில் இயேசு கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். அந்த அன்பானது மாறிப்போகும் மானிட அன்பு அல்ல. அது என்றும் மாறாத மாசற்ற தூய அன்பு. இன்று உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலையின் நடுவிலிருந்தாலும், இனி விடிவு இல்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுப் போனாலும், உங்களுக்காக சிலுவையில் பலியான இயேசுவை நோக்கிப் பாருங்கள். இயேசுவின் நாமத்தை விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள். தம்மண்டை வந்தோரை தள்ளாத இயேசு உங்களை அழைக்கின்றார்.

**ஏசாயா 53:5**

நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

**ஜெபம்**: அன்பான பிதாவே, நீர் ஒருவரே என் நிலைமையை நன்றாய் அறிந்தவர். எந்த சூழ்நிலையிலும் மாறாத உம்முடைய அன்பினாலே என்னை அரவணைத்து காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேதனையின் மத்தியில் மன்னிப்பின் ஜெபம்

பிலாத்து என்னும் ரோம அதிகாரி இயேசுவை விடுதலையாக்க மனதாய் யூத மதத் தலைவர்களையும், ஜனங்களையும் நோக்கி: இயேசு வினிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்றான். ஆனால் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனங்களும் அவர்மேல் பிடிவாதமாய் பொய் குற்றச்சாட்டுகளைக் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இயேசுவை சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். ரோம படைத்தலைவனாகிய நூற்றுக்கு அதிபதி சிலுவையில் சம்பவித்ததைக் கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொன்னான். கருப்பொருளாவது, இயேசுவை சிலுவையில் அறையும்படி பொய்க் குற்றம் சாட்டிய யூதமதத் தலைவர்களும், ஜனங்களும், இயேசுவை பாடுகளுக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்த ரோமர்களும் இயேசு நிரபராதி என்பதை அறிந்திருந்தும் நீதியை நிறைவேற்றாமல் அநீதியையே செய்தார்கள். தேற்றுவார் யாருமில்லாமல், படு வேதனையின் மத்தியிலே, சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு, சுய அனுதாபத்தை தேடவில்லை. தனக்கு தீர்ப்பு செய்து, அநீதியை நிறைவேற்றுகின்றவர்கள், நித்திய ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகாதபடிக்கு அவர்களுக்காகவும் மரிக்கும் தறுவாயில், பிதாவிடம் பரிந்து பேசினார். அவர்கள் என்னத்தை செய்கின்றார்கள் என்பதை அறியாதபடி அவர்களுடைய மனக்கண்கள் குருடுபட்டிருந்தது. அருள் நாதர் இயேசு: இவர்களை மன்னியும் என்று ஜெபித்தார். பிரியமானவர்களே, நாங்கள் எந்தக் குற்றமும் செய்யாதிருக்க, எங்களை குற்றவாளிகளாக நியாயந்தீர்க்கின்றவர்கள் இந்த உலகிலே இருக்கின்றார்கள். அவர்கள் எங்கள் குடும்பத்தவர்களாகவோ, நண்பர்களாகவோ, இனஞ்சனங்களாகவோ, சகவிசுவாசிகளாகவோ, அதிகாரிகளாகவோ, அயலவர்களாகவோ, அந்நியர்களாகவோ இருக்கலாம். அப்படியான அநியாயத்தை அனுபவிக்கும் நிலை மிகவும் கடினமானது. ஆனாலும், எங்களுடைய கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு வாழ்ந்து காட்டியபடி, எந்த சூழ்நிலையிலும் நாங்கள் எல்லோரையும் மன்னிக்கவும், எங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

**லூக்கா 23:34**

அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, எந்த கடினமான சூழ்நிலையிலும், மற்றவர்களை மன்னிக்கவும், அவர்களின் அறியாமைக்காக வேண்டுதல் செய்யவும் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்



www.gtachurch

# உங்களுக்குச் சமாதானம்

பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் இயேசுவை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள். இயேசுதாமே, இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் ஆனால் இவைகள் சம்பவித்து மூன்றாம் நாளாகிவிட்டது என்று சில சீஷர்களும் துக்கித்துக் கொண்டிருந்தார்கள் (லூக்கா 24:21). சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக இயேசுவோடு வாழ்ந்தவர்கள், அவர் சென்ற இடமெங்கும் அவரை பின்பற்றிச் சென்றவர்கள், அற்புதமான காட்சிகளை கண்டவர்கள், ஆனால் தாங்கள் எதிர்பார்த்திருந்த காரியம் கைகூடவில்லை என நம்பிக்கை இழந்து போனார்கள். மனிதர்களால் தங்களுக்கு தீங்கு ஏற்படும் என்று கலங்கி நின்றார்கள். இப்படியான சூழ்நிலையிலே, வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் மாலை வேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். (யோவான் 20:19-20). பிரியமானவர்களே, எங்களுடைய வாழ்க்கையிலே, எதிர்நோக்கும் சவால்களினால் கர்த்தர் எங்களை மறந்தாரோ, கைவிட்டாரோ என்ற எண்ணங்கள் சிந்தையில் தோன்றலாம். இந்த உலகத்தினால் உண்டாகும் அச்சம் மனதை கலங்கடிக்கலாம். நான் வீணாய் ஓடினேனோ? விருதவாய் காரியங்களை செய்தேனோ என்று பாதிவழியில் தரித்து நிற்கலாம். ஆனால், எங்கள் அன்புள்ள கர்த்தராகிய இயேசு, எங்களை மறந்து போகின்றவர் அல்லர். அவரே எங்கள் சமாதான காரணர். அவர் எங்களை ஆற்றித் தேற்றி, பெலப்படுத்தி, நாங்கள் உயிரோடு இருக்கும்வரை இன்னுமாய் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டிய பெலனைத் தந்து வழிநடத்திச் செல்வார். நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். இன்றைய நாளிலே, நாங்கள் கர்த்தராகிய இயேசு 'மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த நாளை' நினைவுகூருகின்ற வேளையிலே, அவர் மறுபடியும் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படி அவரைப் பற்றும் விசுவாசத்திலே உறுதியாக நிலைத்திருங்கள். கர்த்தருடைய சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளுகை செய்யட்டும்.

**யோவான் 20:19**

**இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்..**

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, எந்த சூழ்நிலையிலும், மனம் தளர்ந்து போய் விடாமல், உம்முடைய வாக்குத்தத்தத்தை உறுதியாய் பற்றி கொண்டு விசுவாசத்தில் நிலைத்திருக்க என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேதனை தரும் மனப் புண்கள்

நெருக்கங்களும் துன்பங்களும் மனிதர்களின் வாழ்க்கையிலே ஏற்படும் போது, பொதுவாக அதன் காரணத்தை மற்றவர்களின் மேல் போட்டுவிடுவதுண்டு. சிலர் பிசாசை குற்றம் சாட்டுவார்கள், வேறு சிலர் மற்றய மனிதர்கள் மேல் குற்றத்தைப் போட்டுவிடுவார்கள், இன்னும் சிலர் கடவுளை குற்றம் சாட்டி விடுவார்கள். அதாவது, தன்னுடைய வாழ்வில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுக்கு தான் எவ்வளவேனும் பொறுப்பு அல்ல, மற்றவர்களே காரணம் என்ற தீர்மானத்திற்கு வந்து விடுகின்றார்கள். சில சந்தர்ப்பங்களிலே, எங் கள் வாழ்க்கையில் ஏற்படும் ஒரு குறி ப்பிட்ட பிரச்சனைக்கு மற்றவர்களே மூல காரணிகளாக இருக்கலாம். காரியம் எப்படியாக இருந்தாலும் குற்றம் சாட்டுதலில் தரித்து நிற்பது எங்கள் வாழ்க்கையை மேலும் பின்னடையச் செய்யும். உதைபந்தாட்ட விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் விளையாட்டு வீரன், எதிரணியினர் செய்த முறைதவறிய செயலை (Foul) பற்றியே போட்டி நேரம் முழுவதும் அலட்டிக் கொள்வானாக இருந்தால் அவன் அந்தப் போட்டியில் சிறந்து விளங்கப் போவதில்லை. கடந்த கால பின்னடைவுகளில் துக்கித்துக் கொண்டிருந்தால், நிகழ்காலத்தில் செய்ய வேண்டியவைகளை நாங்கள் தவறவிட்டுவிடுவோம் அதனால் எங்கள் எதிர்காலத்தை நாங்களே மிகவும் கடினமாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படும். மற்றவர்களை குற்றம் சாட்டிக் கொண்டு வாழும்போது, எங்கள் உள்ளத்தில் எங்களை அறியாமலே கசப்பு ஒட்டிக் கொள்ளும். அது என்புருக்கி நோயைப் போல எங்கள் வாழ்வை பெலனற்றுப் போக செய்துவிடும். வாழ்வை களிப்புடன் கழிக்க வேண்டிய சந்தோஷமான நாட்கள் மனநிறைவற்ற நாட்களாக கடந்து போய் விடும். கடந்ததை நினைத்து கலங்கிக் கொண்டிருக்காமல், வேதனை தரும் மனப்புண்களுக்கு காயம் கட்டும் பரிகாரியாகிய கர்த்தரை நோக்கிப் பாருங்கள். குற்றம் சாட்டுகின்றவனாகிய பிசாசானவன், நாங்கள் தன்னைப் போலவே குற்றம் சாட்டுகின்றவர்களாக வாழ்ந்து ஈற்றிலே அழிந்து போகும்படிக்கே விரும்புகின்றான். ஆனால், அன்புள்ள கர்த்தர் இயேசு, இருதயம் நொறுக்குண்டவர்களை குணமாக்குகின்றவர். மனப் புண்களினால் வேதனைப் படுகின்றவர்களை ஆற்றித் தேற்றி காயம் கட்டுகின் றவர். அவரிடம் உங்கள் நிலையை இன்று கூறுங்கள்

**சங்கீதம் 147:3**

**இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.**

**ஜெபம்:** என் நிலையை நன்றாக அறிந்த தேவனே, எனக்கு வேதனை தரும் மனக் காயங்களை நீர் அறிந்திருக்கின்றீர். அவைகளிலிருந்து நான் முற்றிலும் விடுதலையாக என்னை குணப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுய அனுதாபங்கள் தலைதூக்கும் போது

தாவீது என்னும் மனிதனின் வாழ்க்கையிலே அவருடைய குடும்பத்தாரால், நாட்டு மக்களால், தேசத்தின் அதிகாரிகளால் ஏற்பட்ட துன்பங்கள் ஏராளம். அவற்றுள் சில அவர் தானே தமக்கு ஏற்படுத்திக் கொண்ட காயங்கள் (self inflicted wounds). தேசத்தை ஆட்சி செய்த சவுல் ராஜா, தனக்கு அடுத்த ராஜாவாக, தன் சந்ததியார் அல்லாமல், தாவீதை கர்த்தர் தெரிந்து கொண்டார் என்று அறிந்த போது, தாவீதைக் கொன்றுபோடும்படி தன் சேனையோடு பின் தொடர்ந்தான். குற்றம் ஏதும் செய்யாத தாவீதோ, நீண்ட காலமாக: மலைகளிலும், கெபிகளிலும், அந்நிய தேசங்களிலும் சஞ்சரித்து வந்தான். அந்நாட்களிலே அவர் வெகுவாய் மனவேதனைப்பட்டார். எனினும், தன் உள்ளத்தை துக்கமான உணர்வுகளுக்கு அடிமையாக்கி சுய அனுதாபத்திலே (Self Pity) தரித்து நிற்கவில்லை. தன் மனம் தன்னைக் குறித்து சுட்டிக் காட்டும் அவல நிலையை கேட்காமல், தன் ஆத்துமாவை நோக்கி அவர் பேசினார். "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன். என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது. ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்." முடிவிலே அவை அனைத்திலிருந்தும் வெற்றிப் பெற்றார். எனவே, எங்களுக்கு நெருக்கங்கள் ஏற்படும் போது நாங்களும் சுயஅனுதாபத்திற்குள்ளே மூழ்கிப்போகக் கூடாது. எங்கள் சுய நினைவுகளும் நிந்தனைகளும் எமது வாழ்வை மேற்கொள்ள விடாமல், எங்கள் மனதை நோக்கி: நீ கலங்காதே, திகையாதே ஜெயங்கொண்ட கிறிஸ்து உன்னோடிருக்கின்றார்" என்று அறிக்கை செய்ய வேண்டும். தேவனுடைய கிருபை எப்போதும் எங்களோடு கூட இருக்கின்றது. ஆவி, ஆத்துமா, சரீரம் சோர்ந்து போகும் வேளைகளிலே, தேவனைத் துதியுங்கள், தெய்வீக கானங்களை பாடுங்கள். கர்த்தரிடத்தில் உங்கள் வேண்டுதலைத் தெரியப்படுத்துங்கள். உலகத்தை ஜெயித்த இயேசு எங்களோடு இருக்கின்றார்.

**சங்கீதம் 42:8**

ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார் இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்.

**ஜெபம்:** வெற்றி தரும் தேவனே, என்னை சூழ்ந்திருக்கும் நெருக்கங்களைக் கண்டு, நான் சுய அனுதாபத்தில் மூழ்கிவிடாமல், உம்மை நோக்கிப் பார்த்து சூழ்நிலைகளை ஜெயிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு

ஒரு வாடகைவீட்டிலே வசித்து வந்த மனிதனுக்கும், அந்த வீட்டின் சொந்தக் காரனுக்கும் இடையிலே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் அவ்வப்போது சில வாக்குவாதங்கள் ஏற்பட்டது. இந்த நிலை ஒன்றன்பின் ஒன்றாக பல விடயங்களில் ஏற்பட்டதால், அந்த வீட்டின் வாடகை ஒப்பந்தத்தை உடைத்து விட்டு, தன் குடும்பத்தோடு இன்னுமொரு வீட்டிலே வாடகைக்கு அமர்ந்து கொண்டான். இந்தப் புதிய சொந்தக் காரரோடு முரண்பாடுகள் இல்லாமல், காரியங்கள் சுமுகமாக போய்க் கொண்டிருந்தது. அந்த மனிதன் தன் மனைவியை நோக்கி: "பார்த்தாயா, இந்த வீட்டுச் சொந்தக் காரன் நல்ல மனிதன், கடந்த ஆறு மாதங்களாக பெரிய பிரச்சனைகள் இல்லாமல் வாழ்கின்றோம் என்று கூறினான். மனைவி மறுமொழியாக: இந்த வீட்டு சொந்தக்காரர் முன்னைய வீட்டின் சொந்தக் காரரைவிட புரிந்துணர்வு உள்ள மனிதன் என்பது மெய்தான், ஆனால் அதற்கு மேலாக எங்கள் புரிந்துணர்விலும் பெரிதான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் கருத்து முரண்பாடுகளை வாக்குவாதங்களாக்காமல் பொறுமையுடன் இருக்க கற்று கொண்டிருக்கின்றோம்" என்றாள் (ரோமர் 12:17-18). இன்று மனிதர்கள் தங்கள் மனநிலையை மாற்றி, விட்டுக் கொடுத்து, தீமையை நன்மையினால் மேற்கொள்வதற்கு பதிலாக, எந்த சிந்தனையும் இன்றி, வீட்டை விற்று, வேறொரு வீட்டிற்கும், பாடசாலைகளை விட்டு வேறு பாடசாலைகளுக்கும், சபைகளை விட்டு வேறு சபைகளுக்கும், திருமண ஒப்பந்தங்களை உடைத்து, புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதும் சகஜமாக மாறிக் கொண்டு போகின்றது. மனம் மாற்றமில்லாமல் எந்த ஒரு உடன்படிக்கையும் நிலைநிற்கப் போவதில்லை. எனவே எந்த ஒரு ஒப்பந்தத்தையும் உடைக்க முன்பு, முதலில் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நன்றாக சிந்தனை செய்யுங்கள். நாங்கள் உயரே வானத்திற்கு சென்றாலும், பாதாளத்திலே படுக்கை போட்டாலும், தேவனுடைய வழி மாறிப் போகப் போவதில்லை. இந்த உலகத்தின் போக்கில் வாழ்க்கையை வென்றுவிடுவேன் என்று வாழாமல், எங்கள் மனம் மறுரூபமாக வேண்டும். சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறதுபோலிருக்கும் ஆதலால் விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு.

**நீதிமொழிகள் 15:1**

மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும் கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.

**ஜெபம்**: நன்மையின் ஊற்றாகிய தேவனே, நான் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்ல, என் மனம் உம் வார்த்தையின் வெளிச்சத்தில் மறுரூபமாக வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# விடியலைத் தேடும் மாந்தர்கள்

"இரவுக்கும் எல்லை ஓர் விடியல் அன்றோ" என்று ஒரு கிறிஸ்தவ பாடலின் அடிகள் அழகாக தொகுக்கப்பட்டிருக்கின்றது. சூரியன் மறைந்து, பொழுதுபட்டு கார் மேகங்கள் சூழ்ந்து கொள்ளும் இரவுகள் வருவதுண்டு. ஆனாலும் அந்த இரவு நீடித்திருப்பதில்லை. அது சில மணித்தியாலங்கள்வரை நீடித்தாலும் பொழுது விடிந்து விடும். அதுபோலவே, கண்ணீரின் பள்ளத்தாக்குகளை கடக்கும் போதும் காரிருள் போன்ற நாட்கள் எங்கள் வாழ்க்கையில் வரும் போதும் எதையுமே சிந்தித்து செயலாற்ற முடியாத நிலை. எவராலும் எங்களுக்கு உதவ முடியாது. எதிர் நோக்கும் பிரச்சனைகளை யாருக்கும் எடுத்துச் சொல்ல முடியவில்லை. சொன்னாலும், என் நிலையை யார்தான் புரிந்து கொள்வார்கள் என்ற கேள்வியும் மனதில் தோன்றும். ஆனால் அதற்குரிய பதில் உன்னதமான கர்த்தரிடத்திலே உண்டு. "இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருங்கள். அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகும்போது, அவர் தமது சிறகுகளாலே உங்களை மூடுவார்." சஞ்சலமும் தவிப்பும் நிறைந்த கசப்பான அனுபவங்களும் ஒரு இராத்திரியைப் போல கடந்து போகும். அந்த காரிருள் போன்ற விக்கினங்கள் கடந்து போகும்வரைக்கும் உன்னதமாவருடைய மறைவில், சர்வவல்லவருடைய நிழலில் தங்கியிருங்கள். "இரவுக்கும் எல்லை ஓர் விடியல்" என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள். விடிவெள்ளி நட்சத்திரமாக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள் (வெளி 22:16). "உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும் தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்." எனவே பொறுமையை இழந்து, வாழ்வில் நோவுகளை இன்னும் அதிகமாக கூட்டிக் கொள்ளாமல், கர்த்தருக்கு காத்திருங்கள். விசுவாச வார்த்தைகளை தியானம் செய்யுங்கள். வேதத்திலுள்ள பரிசுத்தவான்களின் சாட்சியான வாழ்க்கையை தியானம் செய்யுங்கள். கர்த்தர் உங்களோடு கூட இருந்து வழிநடத்திச் செல்வார்.

**சங்கீதம் 57:1**

எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும் உம்மை என் ஆத்துமா அண்டிக் கொள்ளுகிறது. விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.

**ஜெபம்:** நெருக்கடி வேளையில் புகலிடமான தேவனே, மனதின் போராட்டங்களின் மத்தியில் மாய்ந்து மடிந்து போய்விடாதபடி, பொறுமையுடன் உம்முடைய பாதத்தில் தரித்திருக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | சித்திரை 17** | மாலை வாசகம் – யோவான் 8:12

# நித்திய மகிழ்ச்சியின் நாள் வரைக்கும்...

இந்த உலக போக்கின் பிரகாரம் அந்தகார இருள், மனிதர்களின் மனக்கண்களை குருடாக்கிவிடுகின்றது. மனிதர்கள் கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலிருக்கிறவர்களாயும், கற்று தேறியும் அறிவில்லாதவர்களாக மாயை பின்பற்றுகின்றவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள். இது ஏன்? எல்லா மனுஷருடைய வாழ்க்கையையும் பிரகாசிப்பிக்கின்ற மெய்யான ஒளியாக இயேசு, வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் பாவ இருளை விரும்புகின்றார்கள். அதனாலே தாங்களே தங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு காரணர்களாக மாறிவிடுகின்றார்கள். தேவனை அறி யாத நாட்களிலே, நாங்களும் உலகத்தினால் உண்டான கேட்டின் இருளிலே வாழ்ந்து வந்தோம். உள்ளத்தை பிரகாசிப்பிக்கின்ற ஜீவ ஒளியாக இயேசு எங்கள் வாழ்க்கையிலே வந்தார். தம்முடைய தெய்வீக ஒளியை எங்கள் உள்ளத்தில் வீசச் செய்தார். புறம்பே இந்த உலகிலே பாவ காரிருள் சூழ்ந்திருந்தாலும், நாங்கள் இருளிலே மருளாதபடிக்கு இயேசு வழியாக எங்கள் மனக்கண்கள பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த பிரகாசம் மங்கி அணைந்து போகாதபடிக்கு பரிசுத்த ஆவியானவர் எங்களை அனல்மூட்டி எரிய விடுகின்றார். எனவே நாங்கள் அந்தகார இருளின் கிரியைகளை கண்டு பயந்து நடுங்குகின்றவர்கள் அல்லர். மாறாக, இந்த உலகத்திலே பிரகாசிக்கின்ற ஒளிச்சுடர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றோம். இன்று எங்கள் உள்ளத்திலே பிரகாசிக்கின்ற தெய்வீக பேரொளி, நாங்கள் சென்றடையும் நித்திய நகரமாகிய பரலோகிலே, பிரதியட்சமாய் பிரகாசிக்கும். அங்கே “இனி சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தர் உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார். உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உன் சந்திரன் மறைவதுமில்லை. கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார் உன் துக்கநாட்கள் முடிந்துபோம். நித்திய மகிமையிலே சேர்ந்திடும் அந்த நாளைக் குறித்த விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருப்போம். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுவோம். அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரராக இருக்கும்படிக்கு, எங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம் எங்களை அழைத்த உன்னதமான தேவனுடைய புண்ணியங்களை, எங்கள் வாழ்க்கையின் நடைமுறையினால் மற்றவர்களுக்கு காண்பிப்போம்.

**ஏசாயா 60:20**

கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்.

**ஜெபம்:** சகலவித ஆறுதலின் தெய்வமே, நம் முன்னோர்களின் நற்சாட்சியின் வாழ்வை கவனித்து, வெற்றி வாழ்வை வாழும் வழிகளை கற்றுக் கொள்ளும் இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்கிரியை செய்வதில் உறுதியாய் இருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதன் எப்போதும் நாட்டிலே வாழும் மனிதர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணமுடையவாளாக செயற்பட்டு வந்தான். செல்லும் இடமெல்லாம் நன்மை செய்து வந்தபோதும் மனிதர்களிலே பலர் அவனை ஏற்றுக் கொள்ளாமல், தங்கள் கண்போன போக்கின்படியே வாழ்ந்து வந்ததை உணர்ந்த போது அவன் மனம் சோர்ந்து போனான். கர்த்தராகிய இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே நன்மைகள் செய்கின்றவராகவே சுற்றித் திரிந்தார். ஆனால், மதத்தலைவர்களில் பெரும்பான்மையானோரும், கல்விமான்களும், அதிகாரிகளும், ஜனங்களில் அதிகப்படியானோரும் அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜனங்கள் நன்மைகளை பெற ஆயத்தமாக இருந்தார்கள். தங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை காண ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் மனந்திரும்புவதற்கோ ஆயத்தமாக இருக்கவில்லை. அன்றும் இன்றும் மனிதர்கள், தாங்கள் எதிர்பார்க்கும் காரியங்களையும், இந்த உலக போக்கின்படி தாங்கள் வாழும் வாழ்வின் வழிமுறைகளுக்கு ஏற்புடையதும், தங்கள் பாரம்பரித்திற்கு ஒத்ததுமான உபதேசங்களையே கேட்க விரும்புகின்றார்கள். அதனால் என்ன, நாங்கள் நற்கிரியைகளை செய்வதை விட்டுவிட முடியுமோ? இந்த உலக கேட்டிற்கு உடந்தையாகவுள்ள வழிகளை சரி என்று கூற முடியுமோ? இல்லை அப்படி வாழமுடியாது. நித்திய வாழ்வடையும் வழியை பெரும்பான்மையானோரும், பெருங் குடிமக்களும் ஏற்றுக் கொள்ள மறுப்பதினால் நாங்கள் அறிந்த சத்தியத்தை அறிவிப்பதை நிறுத்திவிட முடியாது. இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கர்த்தராகிய இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் ஜனங்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், இயேசுதாமே நன்மை செய்வதிலிருந்து ஓய்ந்து போகவில்லை. சிலுவை மரணம் வரைக்கும் பிதாவினுடைய சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றி முடித்தார். இயேசுவைப் போல நாங் களும் நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போம்.

**கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

**ஜெபம்:** நன்மைகளின் ஊற்றாகிய தேவனே, நிந்தனைகள் அவமானங்கள் மத்தியிலும் இயேசு நன்மையை நிறைவேற்றியதைப் போல, நானும் என் வாழ்வில் நன்மையை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பலன் தரும் எதிர்காலம்

> **மத்தேயு 13:9**
>
> இயேசு: கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

பிள்ளைகளே, இப்பொழுது நீங்கள் எட்டாம் வகுப்பை முடித்து, உயர்தர பிரிவுக்கு கடந்து செல்லப் போகின்றீர்கள் எனவே படிப்பிக்கும் பாடங்களை இன்னும் ஜாக்கிரதையாக கவனியுங்கள், விளையாட்டுத் தனங்களை விட்டுவிடுங்கள். தரப்படும் வீட்டு வேலைகளை சிரத்தையுடன் செய்யுங்கள். குறைந்தபட்சம் மற்றய மாணாக்கரின் ஆர்வத்தை குலைத்து போடுவதை நிறுத்தி விடுங்கள். இவைகளை இப்போது நீங்கள் கவனியாது போனீர்களானால் நீங்கள் வளர்ந்து பெரியவர்களான பின்பும் வாழ்வில் அதிக கஷ்டங்களை சந்திக்க நேரிடும் என்று ஒரு கிராமத்திலே பல வருடங்களாக கல்வி கற்று கொடுக்கும் ஆசிரியர் தம் மாணாக்கருக்கு கூறினார். அவர் கூறிய அறிவுரைகளை சில மாணவர்கள் ஆர்வத்துடன் உள்வாங்கிக் கொண்டார்கள். ஆனால் வேறு சிலரோ, வழமை போல அந்த அறிவுரைகளை அசட்டை செய்து கொண்டார்கள். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். பட்டணத்து வாழ்க்கையை அறியாத அந்த ஆசிரியரின் அறிவுரையை நாங்கள் யாவரும் சரியானது என ஏற்றுக் கொள்வோம். கிராமத்திலே கல்வி கற்றுக் கொடுக்கும் அந்த எளிமையான ஆசிரியர் எப்படி எதிர்காலத்தைக் குறித்து திட்டமாக கூறமுடியும்? அந்த ஆசிரியர், பெரும் வைத்தியர் அல்ல. அவர் ஒரு பொறியியலாளர் அல்ல. பெயர்பெற்ற வக்கீலும் அல்ல. ஆனால் முற்பகல் செய்வது பிற்பகல் விளையும் என்ற வாழ்க்கையின் அடித்தளமான அம்சத்தை அவர் நன்கு அறிந்தவராக இருந்தார். சில மாணவர்கள், தங்களுக்கு கிடைக்கும் அருமையான சந்தர்ப்பங்களை அசட்டை செய்து, தங்கள் செவிகளை அறிவுரைக்கு அடைத்துக் கொள்வது போல, இன்று உலகிலே அநேக ஜனங்கள் வாழ்கின்றார்கள். வாழ்க்கையின் கருப்பொருள் என்ன என்பது அவர்களுக்கு போதிக்கப்பட்டும், அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொள்கின்றார்கள். தாங்கள் போகும் பாதையின் முடிவில் அழிவு உண்டு என்று அறிவிக்கப்பட்டும், அதை உணர்ந்து கொள்ளாமல் தங்கள் இருதயங்களை, அறிவுரைகளை கேளாத மாணவர்களைப் போல கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, நாங்கள் காதிருந்தும் கேளாதவனைப் போல வாழாமல், வேதம் கூறும் அறிவுரைகளை கேட்டு, அதன்படி எங்கள் இருதயங்களை பெரும் பலனைத் தரும் பண்பட்ட நல்ல நிலமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

**ஜெபம்**: பரலோக தந்தையே, வாழ்வு தரும் திருவசனங்களுக்கு செவி கொடுத்து, கீழ்ப்படிந்து, அதன்படி எங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | சித்திரை 20 | 📖 மாலை வாசகம் – 2 பேதுரு 3:9

# மனதை கடினப் படுத்துவதை விட்டுவிடுங்கள்

ஆசிரியரின் அறிவுரையை கேட்க விரும்பமில்லாத மாணாக்கன், பெற்றோரின் போதகத்தை தள்ளிவிடும் பிள்ளை, மூப்பர்களின் ஆலோசனைகளை தள்ளிவிடும் வாலிபர்கள், தங்கள் தங்கள் வயதுடையவர்கள் மத்தியிலே குறிப்பிட்ட காலத்திற்கு பிரபல்யமாக இருக்கலாம். ஆனால், இவர்களோ தங்கள் வாழ்க்கையில் பெரிதான ஒரு பாதகத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்கின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, எருசலேம் நகரம் ரோமரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாட்களிலே, இரண்டு குற்றவாளிகளுக்கு அவர்களின் சட்டத்தின்படி மரண தண்டனை தீர்க்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு குற்றவாளிகளும், இயேசுவோடு கூட, அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அதில் ஒருவன், மரணத்தறுவாயில் மனந்திரும்பும் உள்ளமுடையவனாக இருந்தான். மற்றவனோ, இன்னும் சில மணித்தியாலங்களில் மரிக்கப் போகின்றேன் என்று அறிந்திருந்தும், தன் மனதை இன்னும் கடினப்படுத்தி, கடினமாக வார்த்தைகளை பேசுகின்றவனாக இருந்தான். தங்கள் மனதை கடினப்படுத்தி வாழ்கின்ற மனிதர்கள் வயோதிபத்தை அடைந்தாலும் அல்லது நோய் துன்பங்களினால் பீடிக்கப்பட்டிருந்தாலும், தங்கள் கௌரவத்தைவிட்டுவிடக் கூடாது என்று நல் ஆலோசனைகளை தள்ளி, மனந்திரும்ப மனதில்லாமல் சுயபெருமைக்கும் அகங்காரத்திற்கும் அடிமைகளாக கடந்து போகின்றார்கள். பிரியமானவர்களே, உங்களுடைய வயது எத்தனையாக இருந்தாலும், இன்றே வேத வசனத்தின் வெளிச்சத்தில் சிந்தனை செய்ய ஆரம்பியுங்கள். எடுத்துக் காட்டாக, “இயேசு சொன்னார்: உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.” என்ற வசனத்தை கேட்கும் போது, நாங்கள் இந்த உலக அளவுகோலின்படி உயர்ந்தவர்களாக அல்லது தாழ்ந்தவர்களாக இருந்தாலும், எங்கள், மதக் கொள்கைகள், கல்வி, அந்தஸ்து, எங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்துவதற்கு இடங் கொடுக்காமல், இயேசுவின் வார்த்தையின்படி எங்களை நிந்திக்கின்றவர்களுக்காகவும், துன்பப்படுத்துகின்றவர்களுக்காகவும் ஜெபிக்கும்படிக்கு எங்கள் மனம் மாற வேண்டும். மனம்திரும்புதலுக்கேற்ற நல்ல கனிகளை, செயற்பாடுகளை, வாழ்க்கை முறை மாற்றங்களை எங்கள் வாழ்வில் வெளிக்காட்ட வேண்டும்.

**மத்தேயு 3:8**

**மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, எப்போதும் உம் வசனத்தை கேட்டு, அதைத் தியானித்து, அதன்படி என் வாழ்க்கை நாளுக்கு நாள் மாறும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | சித்திரை 21 | 🕮 மாலை வாசகம் – சங்கீதம் 90:12

# நாட்களை அறிந்து செயற்படுங்கள்

ஒரு குருவானவர், மிகவும் முக்கியமான ஒரு நீண்ட பயணத்தில், தன்னோடு இணைந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து தன் சீஷர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அது ஒரு முக்கியமான பிரயாணமானதால், பல நாட்களாக அதற்கென ஆயத்தப்பட வேண்டும் என்று, பல அறிவுரைகளை கூறிவந்தார். அந்த பிரயாணத்தின் ஆரம்ப நாளை யும், ஆரம்பிக்கும் இடத்தையும், செல்ல வேண்டிய தூரத்தையும், வழி யில் எதிர் நோக்கவிருக்கும் சவால்களையும், முடிவில், தாபரிக்கும் இடத்தையும், அதன் மேன்மையையும் குறித்து எடுத்துரைத்தார். அவருடைய சீஷர்களில் பத்து பேர்களில் ஐந்து பேர், மிகவும் ஆவலுடன் குருவானவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த பிரயாணத்தைக் குறித்து அறிய இன்னும் ஆவலாக இருந்தார்கள். மிகுதியானவர்களோ, குருவானவர் கூறும் காரியங்களைக் குறித்து கவனமற்றவர்களாக இருந்தார்கள். ஆர்வமுள்ளவர்கள் அதிகப்படியான அறிவுரைகளை கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். ஆர்வமற்றவர்கள் ஏனோ தானோ என்று இருந்ததால், பிரயாணத்தின் ஆரம்ப நாளையும் இடத்தையும் மறந்து தூங்கிவிட்டார்கள். அவர்கள் எழுந்து பார்த்தபோதோ, குருவானவரையும், மற்றய ஐந்து சீஷர்களையும் காண முடியவில்லை. என்ன செய்வது, எங்கே செல்வது, எப்படிச் செல்வது ஒன்றைக் குறித்தும் அறிவற்றவர்களாக இருந்தார்கள். ஆம் பிரியமானவர்களே, இயேசுவின் உபதேசத்தைக் கேட்ட யூதமதத் தலைவர்கள் கடுங்கோபம் கொண்டார்கள், ஜனங்களில் பலர் அவரை அசட்டை செய்தார்கள். ஆனால் இயேசு அவர்கள் மத்தியிலே நின்று: சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். அவரை மனதார பின்பற்றிய சீஷர்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்று பெரும் பாக்கியத்தைக் கண்டடைந்தார்கள். அந்த அழைப்பின் குரல் இன்று எங்கள் காதுகளில் தொனிக்கப்படுகின்றது. நாங்கள் எவ்வளவு சிறப்புடன் இன்று வாழ்ந்து வந்தாலும், இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும் ஒரு நாள் உண்டு. எவரும் அதற்கு விதிவிலக்கு அல்ல. எனவே நாட்களை விரயப்படுத்தாமல், இன்னும் அதிக வாஞ்சையோடு வேதத்தை வாசிப்போம், தேவனை அறிகின்ற அறிவில் வளருவோம்.

**யோவான் 7:37**

**ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.**

**ஜெபம்:** அன்பின் பிதாவே, நான் தாபரிக்கும் ஊராகிய பரலோகத்தையும், அதன் மேன்மையையும் எப்போதும் உணர்ந்தவனா(ளா)க, அந்த வாஞ்சையில் பெருகும்படிக்கு என்னை ஆசீர்வதிப்பீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | சித்திரை 22     📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:10

# ஆராதனையை குறித்த வாஞ்சை

இன்றும் அநேகமான பிரசங்கிமார், தாவீது என்னும் ஆடு மேய்த்து வந்த ஒரு இளைஞனைக் குறித்து அதிகமாக பேசிக் கொள்வார்கள். எப்படியாக அந்த இளைஞன் இடையனாக இருந்து, பல சாவல்களின் மத்தியிலும் தேசத்தின் ராஜாவாக உயர்த்தப்பட்டான் என்பதை குறிப்பிட்டு உபதேசம் செய்வார்கள். பிரசங்கங்களில் மாத்திரமல்ல, தேவானாகிய கர்த்தரும், தாவீதைக் குறித்து அதிகமாக குறிப்பிட்டு பேசியிருக்கின்றார். தாவீதின் வம்சத்திற்கு என்றென்றும் அழியாத ஒரு ராஜ்யபாரத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். அந்த தாவீது என்னும் மனிதனின் ஒரு குணயியல்பைக் எங்கள் வாழ்க்கையுடன் ஒப்பிட்டு தியானித்துக் கொள்வோம். அந்நாட்களிலே தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்கு பண்டிகையை ஆசாரிக்கும்படி எருசலேம் தேவாலயத்திலே கூடி வருவார்கள். இன்று ஆலயத்திலே நாங்கள் தேவனை ஆராதிக்கும்படி கூடி வருகின்றோம். தாவீதின் நாட்களிலே, தாவீதைக் குறித்த எரிச்சலும் பயமும், அந்த தேசத்தின் ராஜாவுக்கு ஏற்பட்டிருந்ததால், அந்த ராஜா, தேசபற்றும், ராஜபக்தியுமுள்ள தாவீதை கொன்று போடும்படி பின்தொடர்ந்தான். இதனால், தாவீது ராஜா மலைகளிலும், குகைகளிலும், வனாந்திரங்களிலும், சஞ்சரிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆனால், தேவனுடைய பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும், துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வந்தேன். ஆனால் இப்போது எனக்கு ஆலயத்திற்கு செல்ல முடியவில்லையே என்பதை நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது. என்று தன் மனவேதனையை கூறினார். இன்று எங்கள் வாழ்க்கை எப்படி இருக்கின்றது? சில மனிதர்கள் ஆலயம் செல்லாதிருக்க போதகர் ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுந்த காரணத்தை தேடுகின்றார்கள். தங்களுக்கேற்றபடி நேரத்தை மாற்றிக் கொள்ள விரும்புகின்றார்கள். அப்படியான சிந்தனை எங்களுக்கு தூரமாக இருக்கட்டும். தாவீதைப் போல நாங்களும் தேவனால் விரும்பப்படத்தக்கவர்களாக, வாஞ்சையோடும், ஆர்வத்தோடும், தேவனை துதிக்க, அவருடைய வார்த்தைகளை கேட்க, அவருடைய சாட்சியை சபை நடுவில் உரைக்க, எங்கள் மனம் ஆசை கொள்ள வேண்டும்.

> **சங்கீதம் 42:6**
>
> **என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறு மலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.**

**ஜெபம்:** உள்ளத்தை அறிந்த தேவனே, உம்மை ஆராதிக்கும் ஜனங்களோடே கூடி, உம்மை தொழுது கொள்ளும் ஆர்வம் என்னில் பெருகும்படிக்காய் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோகதின் இரகசியங்கள்

தேவ காரியங்களைக் குறித்த; வாஞ்சையுள்ளவன், ஆர்வமுள்ளவன், தாகமுள்ளவன், அவைகளை அதிகதிகமாக தனக்குள்ளே பெருகச் செய்கின்றான் என்பதையும், தேவ காரியங்களை குறித்த ஆலோசனைகளை தள்ளிவிடுகின்றவன், அகங்காரமுள்ளவன், அசதியாயிருக்கிறவன், அசட்டை செய்கின்றவன் தன்னிடத்திலுள்ள நன்மைகள் யாவற்றையும் ஈற்றிலே இழந்து போய்விடுகின்றான் என்பதையும் குறித்து கடந்த தினங்களிலே தியானித்தோம். கற்பாறை நிலத்திலே நல்ல விதைகளை விதைத்து, தண்ணீர் ஊற்றி, பசளையை போட்டு, பராமரித்தாலும், அந்த விதை வளர்ந்து பலன் கொடுக்கப் போவதில்லை. ஆனால் பண்பட்ட நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ பெரிதான பலனை கொடுக்கும். பரிசுத்தமான வாழ்க்கையை விரும்பி அதை நாடுகின்றவன், தன்னை அதிகதிகமாக பரிசுத்தப்படுத்திக் கொள்கின்றான். தன் வாழ்வில் வரும் சவால்கள் சோதனைகளை தான் இன்னும் பரிசுத்தமடைவதற்கு ஏதுவாக மாற்றிக் கொள்கின்றான். பரிசுத்த வாழ்க்கை வாழாமல், இந்த உலகத்தின் மாம்ச இச்சைகளில் நாட்டமுள்ளவன், தன்னிடத்திலிருக்கின்ற பரிசுத்தத்தை முற்றிலும் இழந்து போகின்றான். இப்படிப்பட்டவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறிந்து கொள்வதில்லை. அக்காலத்திலே, இயேசுவின் சீஷர்கள், கல்வியறிவில்லாத பாமர மக்கள் என்று கணிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறிந்து கொள்வதற்கு தங்களை தாழ்த்தி, தங்கள் இருதயங்களை திறந்து கொடுத்தார்கள். ஆனால், யூத வேத பிரமாணங்களை திட்டமாக கற்றறிந்திருந்த, சதுசேயர், பரிசேயர், வேதபாரகர் போன்ற சமுதாய அந்தஸ்துள்ள பிரிவுகளை சேர்ந்தவர்களும், அவர்களை பின்பற்றிய ஜனங்களும், பரலோக மேன்மைகளை அறிந்து கொள்ளாதபடிக்கு இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் அசட்டை செய்து, மத வைராக்கியத்தினாலும், சுய பெருமையினாலும் உணர்வற்றவர்களானார்கள். இன்று பரலோக ராஜ்யத்தின் மேன்மையான இரகசியங்களை அறிந்து கொள்ளும்படியாக எங்களுக்கு அருளப்பட்டிருக்கின்றது. எனவே அந்த மேன்மைகளையே நோக்கி பார்த்து நாடோறும் முன்னேறிச் செல்வோம்.

**மத்தேயு 13:11**

**பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கோ அருளப்படவில்லை.**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, கிருபையின் நாட்களிலே வாழும் எங்களுக்கு, அருளப்பட்டிருக்கும் இந்த பாக்கியத்தை அற்பமாக எண்ணாமல், இன்னும் அதிகமாக பற்றிக் கொள்ள வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெற்ற நன்மையை பெருகச் செய்வோம்

புறதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகின்ற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும், கொடுத்தான். ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானனுடைய பணத்தைப் புதைத்து வைத்தான். வெகு காலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக்கேட்டான். அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவனும், இரண்டு தாலாந்து வாங்கினவனும் அதை இரட்டிப்பாக பெருக்கி, எஜமானனிடத்தில் ஒப்புவித்தார்கள். எஜமானன் அவர்களை நோக்கி: அவர்களை பாராட்டி, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: நான் உமக்கு பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன் இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான். அவனுடைய எஜமானன் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே என்று அவனைக் கடிந்துகொண்டு. அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான். பிரியமானவர்களே, அசதியாய் இருக்கின்றவன், சாட்டுப் போக்குகளை தேடுகின்றான். பெற்ற நன்மையை விரயப்படுத்தும் சோம்பலுள்ள ஊழியக்காரனாக இருக்கின்றான். அவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டவைகளினால் அவனுக்கோ மற்றவர்களுக்கோ நன்மை உண்டாகப் போவதில்லை. கிறிஸ்துவின் ஊழியர்களாகிய எங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் அளவின்படி கொடுக்கப்பட்டவைகளுக்கு கணக்கு கொடுக்கும் நாள் ஒன்று உண்டு. எனவே பெற்ற தேவ நன்மையை புதைத்து வைக்காமல், உற்சாகமுள்ளவர்களாக, அதைப் பயன்படுத்தி, பெருகச் செய்கின்றவர்களாக வாழக்கடவோம்.

**மத்தேயு 25:29**

உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான் இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

இந்த சிந்தனையை நன்றாக விளங்கி கொள்வதற்கு, சித்திரை 19-23 வரையிலான தியானங்களை வாசியுங்கள்.

**ஜெபம்**: நீதியின் தேவனே, உண்மையுள்ளவன்(ள்) என என்னிடத்தில் நீர் ஒப்புவித்ததை நான் நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக, வேண்டிய ஞானத்தையும், பெலனையும் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | சித்திரை 25

📖 மாலை வாசகம் – லூக்கா 10:1 –7

# எங்களுக்கு வெளிப்பட்டிருக்கும் தேவ கிருபை

தாத்தா, நீங்கள் நடுகின்ற மாமரம் மிகவும் சிறிய கன்றாக இருக்கின்றதே, இது வளர்ந்து கனி கொடுக்க எவ்வளவு நாட்கள் எடுக்கும் என்று ஒரு சிறு பையன் கேட்டான். நாட்கள் அல்ல மகனே, இது வளர்ந்து பெரிய விருட்சமாவதற்கு அநேக வருடங்கள் எடுக்கலாம். அதோ பார் அந்த பெரிய பலா மரத்தை, அதை என்னுடைய பாட்டனார் சிறிய கன்றாக நாட்டினார். என் பாட்டனார் இப்போது இவ்வுலகில் இல்லை ஆனால் அவர் நாட்டிய மரம் பல ஆண்டுகளாக எவ்வளவு பலனை எங்களுக்கும், இந்த சூழலுக்கும் கொடுக்கின்றது அது என்றுமே வெயிலுக்கு நிழலாகவும், சுவையான கனியைத் தரும் மரமாகவும் இருக்கின்றது. நாங்களும் அயலவர்களும் திருப்த்தியான பின்பு, மிகையானவைகளை விற்று அன்றன்டாட செலவுகளை சந்திக்கவும் அது உதவியாக இருக்கின்றது. அதன் நன்மையை அனுபவிக்கின்ற நாம், எங்களுக்கு பின்வரும் சந்ததியினருக்கும் பல நன்மைகளை நாங்கள் விட்டு செல்ல வேண்டும் என்று விளக்கிக் கூறினார். பிரியமானவர்களே, எங்கள் முன்னோர்களை சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் தேவனை அறியாதவர்களாயும், விக்கிரக ஆராதனைக் கட்டுகளில் அடிமைகளாகவும் இருந்தார்கள். அப்படி தேவனை அறியாத சந்ததியில் வாழ்ந்து வந்தபோதும், தேவ கிருபையானது தேவ சேவைக்கு தங்களை அர்ப்பணித்த தேவ ஊழியர்கள் வழியாக அவர்களுக்கு வெளிப்பட்டது. இந்த தேவ ஊழியர்கள் தங்களையும் தங்களிடத்திலுள்ளவைகளையும் செலவு செய்து, தங்கள் ஜீவனையும் பொருட்டாக எண்ணாமல், தேவனை அறியாத தேசங்களுக்கு மினஷனரிகளாக கடந்து வந்து ஜீவனுள்ள வித்தாகிய தேவ வசனத்தை விதைத்தார்கள். தேசத்திலே தேவ கிருபை அவர்கள் வழியாக வெளி ப்பட்டது. அவர்களின் பிரயாசங்கள் இன்றும் பலனை கொடுக்கின்றது. அவர்களை தொடர்ந்து வந்த, மற்றய தேவ பிள்ளைகள் வழியாக தேவ கிருபை எங்களுக்கும் வெளிப்பட்டது. இன்னும் தேவனை அறியாமல் பாவ இருளில் அழிந்து கொண்டிருக்கும் ஜனங்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்காக பிரசயாசப்படுகின்றவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள். முடிந்தவரை அவர்களுக்கு உதவுங்கள். சிறிய விதை பெரும் பலனைத் தரும்.

**மத்தேயு 9:38**

**ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.**

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, பல பரிசுத்தவான்களின் தியாகங்கள் வழியாக, உம்முடைய கிருபையை இலவசமாக பெற்றுக் கொண்டோம், அந்த கிருபையை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்த என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கமுள்ள மனம்

விதை விதைக்கின்றவர்களே அதன் பலனை அறுவடை செய்து கொள்கின்றார்கள். விதைகளை களஞ்சியத்தில் சேர்த்து வைக்கின்ற வர்கள் விளைச்சலின் பலனை ஒரு போதும் கண்டடையப் போவதி ல்லை. ஏழைகளுக்கு இரங்க மனதில்லாமல், தனக்கென்றும், தன் சந் ததிக்கென்றும் ஐசுவரியத்தை சேர்த்து வைக்கின்றவனின் ஆசை இந்த உலகத்தை பற்றிக் கொள்வதால், தேவ சமாதானத்திற்கு அந்நியனாக மாறிவி டுகின்றான். வெறுமையாக இருக்கும் ஒரு ஏழையின் உணவுத் தட்டில் ஒரு அப்பத்தை வைக்க மனதுள்ளவன் யார்? தங்கள் சரீரத்தை மறைத்துக் கொள்ள தகுந்த ஆடையற்றவர்களுக்கு உதவ முன்வருபவன் யார்? மழைக்கும் வெயி லுக்கும் ஒதுங்க இடமில்லாதவர்களு க்கு வசிப்பிடங்களை அமைத்துக் கொடு க்க மனதுள்ளவன் யார்? பாடசாலைக்கு சென்று அடிப்படைக் கல் வியை கற்பதற்குரிய தேவைகளை சந்திக்க மனதுடையவன் யார்? இப்படியாக நாளாந்த தேவைகளை சந்திக்க முடியாமல் தவிக்கும் திக்கற்ற பிள்ளைகள், விதவைகள் மத்தியிலே சிறிய விதைகளை (உதவிகளை) மனதார விதைத்து மகிழ்பவன், “விதைப்பும் அறுப்பும்” என்ற இரகசியத்தின் மேன்மையை அறிந்திருக்கின்றான். இந்த பூமி யிலே வாழும் நாட்களிலே அவன் தன்னிலுள்ள வெளிச்சத்தை மற்ற வர்கள் வாழ்க்கையிலே வீசச் செய்கின்றான். பரலோக சமாதானத்தை தன் உள்ளத்திலே பெற்றுக் கொள்கின்றான். இந்த உலக அளவு கோலின்படி அவன் ஐசுவரியவான் என்ற பெயரை சூடாவிட்டாலும், கர்த்தரை தன் சந்ததிக்கு தாபரமாக்கிக் கொள்கின்றான். பரலோகிலே தனக்கு பொக்கிஷங்களை சேர்த்துக் கொள்கின்றான். “ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் அவன் கொடுத் ததை அவர் திரும்பக் கொடுப்பார்.” கர்த்தருடைய கைமாறு ஆசீர் வாதமுள்ளது. அந்த ஆசீர்வாதத்தில் மகிழ்ச்சி உண்டாயிருக்கும். எனவே, பொருளாலும், சரீர பிரயாசத்தினாலும், ஏழை எளியவருக்கு தாராள மனதுடன் உதவி செய்யுங்கள். உங்களிடத்திலுள்ளவைகளி லிருந்து எடுத்துக் கொடுங்கள். அவை தற்காலத்திலே அற்பமானவை களாக தோன்றினாலும், வருங்காலங்களிலே பெரிதான விளைச்சலை உங்கள் வாழ்விலும் மற்றவர்களுடைய வாழ்விலும் உண்டு பண்ணும்.

**நீதிமொழிகள் 19:17**

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.**

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, என் இருயத்தைக் கடினப்படுத்தி என் ஆத்துமாவை கெடுத்துக் கொள்ளாமல், இன்று உம்முடைய சத்தத்திற்கு நான் செவி கொடுத்து மனந்திரும்ப என்னை உணர்வுள்ளவனா(ளா) க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்

"என்னிடத்தில் ஐசுவரியம் இருந்தால், நான் எத்தனையோ பெரும் செயற்திட்டங்களை ஏழை எளியவருக்கு செய்வேன், தேவ ஊழியத்தை தாங்கி வருவேன்" என்று ஒரு மனிதன் எப்போதும் சொல்லிக் கொள்வான். இது ஒரு நல்ல எண்ணம். கர்த்தருக்கு சித்தமானால் அப்படியே ஆகட்டும் (யாக்கோபு 4:13-15). ஆனால், தற்போது எங்களைக் குறித்ததான தேவனுடைய சித்தம் என்ன என்பதைக் குறித்து நாங்கள் ஒவ்வொருவரும் எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தர்மசகாயமும், உதாரத்துவமாக கொடுப்பதும் நாளையைக் குறித்த விடயம் அல்ல. நாளைய நாளைக் குறித்து நாங்கள் கவலையடையாமல், இன்று நாங்கள் செய்ய வேண்டியவைகளிலே கருத்துடன் செயற்பட வேண்டும். ஆதிச் திருச்சபையின் நாட்களிலே, மக்கெதோனியா என்னும் நாட்டுச் சபைகள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்பட்டார்கள். அந்நாட்களிலே அவர்கள் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், அவர்கள் உள்ளத்திலே ஏற்பட்டிருந்த பரிபூரண சந்தோஷத்தினாலே, மற்றவர்களுடைய குறைவை நிறைவாக்கும்படி, மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்று தேவ ஊழியராகிய பவுல் அவர்களை குறித்து சாட்சி கொடுத்தார். நிர்பந்தத்தினாலோ, கட்டளையினாலோ அல்ல, கொடுக்க வேண்டும் என்னும் மனம் அவர்களுக்குள் உண்டாயிருந்தது. இது அவர்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபை (2 கொரி 8:1-5). பிரியமானவர்களே, எங்களுடைய பெலத்திற்கேற்றபடிக்கே நாங்கள் தானதர்மங்களை செய்ய வேண்டும் என்பது உண்மை. ஆனால் அந்த கூற்றை, எங்கள் மனக்கடினத்திற்கு சாட்டுபோக்காக பயன்படுத்தாமல், மக்கெதோனியா நாட்டில் இருந்த விசுவாசிகளைப் போல, உதவி செய்ய கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும். உற்சாகமுள்ள இருதயத்தோடு தர்மகாரியத்தில் நாளுக்கு நாள் பெருக்கடவோம்

**2 கொரிந்தியர் 8:7**

அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.

**ஜெபம்:** பரலோக தேவனே, நீர் என்னிடத்தில் ஒப்புவித்ததிலிருந்து எடுத்து, மனமகிழ்ச்சியோடு, உமக்கு உகந்த காணிக்கையாக கொடுப்பதில் பெருகும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரிதான அறுவடை உண்டு

சாதாரண, நாளாந்த உழைப்பில் வசித்து வரும் குடியானவனுக்கு, அவனுடைய நாளாந்த உழைப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவனுக்கு பத்து டொலர்கள் பெரும் பணமாக இருந்தது. ஆனால் அயலில் வசிக்கும் செல்வந்தனுக்கு ஆயிரம் டொலர்கள் கூட அற்ப பணமாகவே இருந்தது. இந்த உலக அளவு கோலின்படி சிறிய தொகை என்பதும் பெரிய தொகை என்பதும் மனிதனுடைய திராணிக்கு தக்கதாக வேறுபட்டிருக்கின்றது. ஐசுவரியத்தின் மிகுதியினால் ஒரு பகுதியை கொடுப்பவர்கள் பெரிதான கனத்தையும், தங்கள் சொற்ப வருமானத்திலிருந்து பெரும்பகுதியை கொடுப்போர் அற்பமாகவும் எண்ணப்படலாம். இது இந்த உலக போக்கின் அளவுப் பிரமாணம். அதனால் நீங்கள் சோர்ந்து போய் விடாதிருங்கள். இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார் ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப்பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். எனவே சிறுக விதைப்பதும், பெருக விதைப்பதும் என்பதின் பொருளை அறிந்து கொள்ளுங்கள். பத்து காசுகள் பெற்றவன், தான் பெற்ற பத்து காசுக்கும், ஐந்து காசுகள் பெற்றவன் தான் பெற்ற ஐந்து காசுக்கும், ஒரு காசு பெற்றவன் தான் பெற்ற ஒரு காசுக்குமே கணக்கு ஒப்புவிப்பான். மனிதர்கள் ஒரு பொருளின் பெறுமதியில், முகமதிப்பில் கண்களை பதியவைக்கின்றார்கள். ஆனால் இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன், மனிதனுடைய நினைவுகளை அறிந்திருக்கின்றார். ஐசுவரியமுள்ளவனாகிலும், நாளாந்த உழைப்பாளியாகிலும், ஏழையாகிலும், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். அவனுடைய விண்கைமாறு மிகுதியாக இருக்கும்.

**2 கொரிந்தியர் 9:6**

பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில்,சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

**ஜெபம்**: இரக்கம் நிறைந்த தேவனே, இந்த பூமியின் பொக்கிஷம் அழிந்து போய்விடும், அவை அழிய முன்பு, அதை ஏழை எளியவர்களுக்கு பயனுள்ளதாக மாற்ற என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன் | சித்திரை 29**  📖 மாலை வாசகம் – ரோமர் 2:1–6

# மனமிரங்க மறந்துவிடாதிருங்கள்

ஒரு ராஜா அவனுடைய ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டு வந்தார்கள். கடனைத்தீர்க்க அவ னுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அந்த வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்தவற்றை ஆண்டவனாகிய ராஜா அறிந்த போது, கோபமடைந்து, மனமிரக்கமில்லாத அந்த பொல்லாத ஊழியன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். (மத்தேயு 18: 23-35). பொதுவாக மனிதர்கள் தங்கள் பழைய நிலைமையை வெகு விரைவில் மறந்து போய்விடுகின்றார்கள். அதாவது, எங்கள் பழைய மனுஷனுக்குரிய, அடிமைத்தனத்திற்குரிய மாம்ச கிரியைகளை மறந்து போவது நல்லது. ஆனால் எங்களுக்கு நன்மை செய்தவர்களையும், எங்கள் தப்பிதங்களை பெரிதுபடுத்தாமல் எங்களுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை (Second chance) தந்தவர்களையும், எங்கள் குற்றங்களை மற்றும் கடன்களை உதாரத்துவமாக மன்னித்துவிட்டவர்களையும் மறந்துவிடுவது நல்லதல்ல. குறிப்பாக, நான் முன்பு செய்த குற்றத்தை ஒருவர் மனமுவந்து மன்னித்திருக்க, எனக்கெதிராக அதே குற்றத்தை செய்தவனை மன இரக்கமில்லாமல் தண்டனையை வழங்க எத்தனிப்பது தேவனுடைய பார்வையிலே ஏற்புடையதல்ல. எனவே மனமிரங்குங்கள், மறந்துவிடாதிருங்கள்.

**மத்தேயு 6:14**

**மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.**

**ஜெபம்**: மனதுருக்கமுடைய தேவனே, கிருபையால் என்னை இரட்சித்தவரே, எனக்கெதிராக குற்றம் செய்தவர்களுக்கு மனதுருக்கத்தை காட்டும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வின் தீர்மானங்களை எடுக்க முன்பு...

கர்த்தருடைய சீஷர்கள், கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசி த்துக்கொண்டிருக்கிறபோது: பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் சவுலையும் (பவுல்) நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரி த்துவிடுங்கள் என்று திருவுளம்பற்றினார். அப்பொழுது சீஷர்கள் உப வாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர் களை தேவன் பிரித்தெடுத்த ஊழியத் திற்கு அனுப்பினார்கள். அந்நாட்களி லே, சபைகள் உபத்திரவத்திற்குள்ளா யிருந்தது. பவுலும், பர்னபாவும். பட்ட ணத்தோறும் சென்று சீஷருடைய மன தைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத் திசொல்லி, நாம் அநேக உபத்திரவ ங்களின் வழியாய் தேவனுடைய ராஜ் யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப் பர்களை ஏற்படுத்திவைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தா ர்கள். இந்த சம்பவங்களை நன்கு கவனித்துப் பாருங்கள். முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்பாக, சீஷர்கள் உபவாசித்து ஜெபம் பண்ணினார்கள். ஏனெனில், தேவனுடைய சித்தம் தங்கள் வாழ்க் கையில், ஊழியத்தில், சபையில் நிறைவேறவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவே எங்கள் வாழ்க்கையிலும் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்பு நாங்கள் தேவனுடைய பாத த்திலே தரித்திருந்து ஜெபிக்க வேண்டும். சில வேளைகளிலே. வயது, மற்றும் நோய் காரணமாக ஏற்பட்டிருக்கும் சரீர பெலவீனங்களினால் உபவாசிக்க முடியாத நிலை ஏற்படுவதுண்டு. ஆனால் ஜெபம் செய்வ தற்கு, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கும் நாங்கள் எந்த சாட்டுப் போக்குகளும் சொல்லக் கூடாது. கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே தம்முடைய திருப்பணியை செய்த நாட்களிலே, அவர் தம்முடைய பிதாவை நோக்கி ஜெபம் செய்கின்றவராகவே இருந்தார். பிதாவுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதே என்னுடைய போஜனம் என்று கூறியிருக்கின்றார் (*யோவான் 4:34, 6:38, லூக்கா 22:42*). எனவே எங்கள் தனிப்பட்ட, குடும்ப, வாழ்க்கையிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நித்தமும் நிறைவேற்றுகின்றவர்களாக வாழும்படிக்கு, முக் கிய தீர்மானங்களை எடுக்க முன்பு உபவாசித்து ஜெபம் செய்வோம்.

**அப்போஸ்தலர் 13:3**

அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வை த்து, அவர்களை அனுப் பினார்கள்.

**ஜெபம்**: பராக்கிரமுள்ள தேவனே, இந்த பூமியிலே வாழும்வரை, உம்மு டைய சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு உம்முடைய வழிமுறைகளை கேட்டு அதன்படி நடக்கும் இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த **இலவச** பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

**முகவரி ADDRESS:**

**நகரம் CITY:**

**மாநிலம் PROVINCE:**

**தபால் குறியீடு POSTAL CODE:**

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________

**மின் அஞ்சல் E-MAIL:**

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

K. Indrajit
72/7 Edirisinghe Road,
Mirihana, Nugegoda

www.gtachurch.ca

www.gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909